

# தமிழரசு

ஜூலை 16-31, 1997 ரூ.3




சுடுமண் சிலைகள்
கட்டுரை உள்ளே...




## இந்த இதழில்...


- சட்டப் பேரவை பவள விழா ... 2
- தலைவர்கள் பெயரில் அறக்கட்டளை ... 9
- புதிய குடும்ப அட்டை வழங்கல் ... 12
- மேதைகளின் வாழ்விலே ... 14
- மொழிவளர்ச்சி இன்றைய நிலையும் எதிர்காலத் தேவைகளும் ... 17
  - முனைவர் ம. இராசேந்திரன்
- கற்க கசடற ... 19
  - ம.ப. விசயகுமார், இ.ஆ.ப, இயக்குநர், சமூக நலத்துறை
- சுடுமண் சிலைகள் ... 21
  - சா. கந்தசாமி
- நதி ... ... 24
  - கவிஞர் எழில்வேந்தன்
- குதிரைச் சவாரி ... 25
  - ஜெயசிம்ஹன்
- குழந்தைத் தொழிலாளர்–எழுத்தாளர் முகாம் ... 28
- எங்கள் ஊர் பிரச்சினை ... 33
- கண்கள் (மருத்துவம்) ... 41
  - டாக்டர் பி. குமாரவேல்
  - டாக்டர் எஸ். கனேசன்
- ஆசிரியர் மடல் ... 48



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2028

மலர் : 28 இதழ் : 2

ஜூலை 15 - 31, 1997

விலை ரூ.3



## பேரவையும் கலைஞர் பெருமையும்

தமிழ்நாடு சட்டப்பேரவையில், அதிக காலம் உறுப்பினராக இருந்த பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கே உண்டு

1957 குளித்தலை

1962 தஞ்சாவூர்

1967 சைதாப்பேட்டை (சென்னை)

1971 மீண்டும் சைதாப்பேட்டை

1977 அண்ணாநகர் (சென்னை)

1980 மீண்டும் அண்ணாநகர்

1989 சென்னை துறைமுகம்

1991 மீண்டும் சென்னை துறைமுகம்

1996 சேப்பாக்கம் (சென்னை)

- எனப் போட்டியிட்ட 9 தொகுதிகளிலும் வெற்றிவாகை சூடிய தனிப் பெருமையாளர் முதல்வர் கலைஞர் அவர்கள்.

இவைதவிர - ஒருமுறை (1986) சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்த சிறப்பும் அவருக்கு உண்டு!

பவள விழாக் காணும் சட்டப் பேரவையில் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக 4வது முறையாகப் பொறுப்பேற்கும் தனிச் சிறப்பும் பெற்றவர் கலைஞர் அவர்கள் ஒருவரேயாவார்!

தமிழ்நாடு

# சட்டமன்றப்

தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழாவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழாவும் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

14.7.1997 அன்று நடைபெற்ற இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் தலைமை தாங்கினார்.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. மன்மோகன் சிங் லிபெர்ஹன் துவக்கவுரை யாற்றியபின் முன்னாள் இந்நாள் மூத்த சபை உறுப்பினர் 1200 பேர்களையும் மேடைக்கு அழைத்து விருதுகள் வழங்கி, விழா மலரை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். முதல் மலரை, முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் - சட்டப்பேரவை முன்னவர் பேராசிரியர் க. அன்பழகன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன், கேரள மாநில முன்னாள் ஆளுநர் திரு. பா. இராமச்சந்திரன், மராத்திய மாநில முன்னாள் ஆளுநர் திரு. சி. சுப்பிரமணியம், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

### முதல்வருக்குப் பொன்னாடை

இவ்விழாவில் 1957ஆம் ஆண்டிலிருந்து பேரவை உறுப்பினராக இருந்து வருகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மேதகு ஆளுநர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

"தனது அரசியல் எதிரிகளையும் வெற்றி கொள்ளும் அறிஞர் அண்ணாவின் பாதையில் நடைபோடுகிறார் தமிழக முதல்வர் கலைஞர்" என்று அப்போது பேசுகையில் அவர் தனிப்படக் குறிப்பிட்டார்.

### மூத்த உறுப்பினர்களுக்குச் சிறப்பு

7 முறை பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. க. அன்பழகன் , த.மா.கா. உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. ஆண்டி அம்பலம், ஆறுமுறை பேரவை உறுப்பினர்களாக இருந்த திரு. பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன், திரு.எஸ். திருநாவுக்கரசு - 5 முறை சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்த திரு. ப.உ.சண்முகம், திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, திரு. வீரபாண்டி ஆறுமுகம், திரு. துரைமுருகன், திரு. ரகுமான்கான், திரு. அழகர்சாமி, திரு. அரங்கநாயகம், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்., இராமச்சந்திரன் ஆகியோருக்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களே பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கினார்.

# பவள விழா பேரவை வைர விழா

85 வயதுக்கு மேற்பட்ட சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆர். வெங்கட்ராமன், திரு. சி. சுப்பிரமணியம், திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, திரு. நல்லசாமி, திரு. டி. அருணாசலம், திருமதி லூர்தம்மாள் சைமன் ஆகியோரும் இந்த விழாவில் கவுரவிக்கப் பட்டார்கள்.

திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள், மேடைக்கு ஏறிவர முடியாத நிலையில் இருந்ததால் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே மேடையினின்றும் கீழே இறங்கிவந்து அவருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

**மேடை அமைப்பு**

சட்டமன்றப் பவளவிழா, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில்தான் நடைபெற்றது என்றாலும், இவ்விழாவில் ஒரு புதுமை செய்யப் பட்டிருந்தது.

அரசு தலைமைச் செயலகத்தின் முன்புறத் தோற்றம் போலவே, மேடை அலங்கரித்து அழகு படுத்தப் பட்டிருந்தது.


தேர்தல்கள் மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டு, 75 ஆண்டுகாலம் ஆகிறது; அதற்கான பவள விழாவும் தமிழகச் சட்டமன்றத்தின் பேரவை தொடங்கப்பட்டு அந்தப் பேரவையின் அறுபதாண்டுகள் நிறைவடையும் வைர விழாவும்தான் இவ்வாறு சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், விழா நிறைவுச் சிறப்புரையாற்றினார்.

'மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள் வரவேற் புரையுடன் தொடங்கிய இவ்விழாவில் - மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

அந்தப் பேரவையும், அமைச்சர் பெருமக்களும், மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களும், கூடும் இடம்தான் பேரவை மண்டபம் ஆகும். அந்த மண்டபத்தின் வரலாறு இங்கே தரப்படுகிறது:





**பேரவை மண்டபம்**

முதன்முதல் 1920இல் 92 உறுப்பினர்களும், பிறகு 1937இல் 215 பேரும், இப்போது 234 பேரும் உறுப்பினர்களாக உள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மிகப் பழமை வாய்ந்ததும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமாகும்.

இந்தியாவிலுள்ள மிகப் பழமையான சட்ட மன்றங்களில் ஒன்றான இதற்கெனத் தனியான வரலாறு உண்டு.

தமிழகத்தின் சட்டமன்றம் 1861ஆம் ஆண்டு இந்தியன் கவுன்சில்ஸ் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து அமைக்கப்பட்டதாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

1909ஆம் ஆண்டு இந்திய அரசின் சட்டப்படி, அன்றைய சென்னையின் மேதகு ஆளுநராக இருந்த சர். ஆர்தர் லாலி என்பவரது ஆணைப்படி, சட்டமன்றப் பேரவை மண்டபம் 1910 -11ல் கட்டப்பட்டது. இக்கட்டிடம், மேதகு லார்டு வில்லிங்டன் ஆப் ராட்டன் காலத்தில், 1919 இந்திய அரசுச் சட்டத்தின்படி மாற்றியமைக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு (Legislative Council) இட வசதியளிக்கும் பொருட்டு 1920ல் விரிவாக்கப்பட்டது.

1921ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10ஆம் நாள் இளவரசர் கன்னாட் கோமகனால் இம்மண்டபம் திறந்துவைக்கப்பட்டது. இச்சட்டமன்ற முகப்பில் 20 கருப்புச் சலவைக் கல் தூண்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஜோசப் சார்னாக் என்பவரது பெயராலேயே "சார்னாக்கைட்" என அழைக்கப்படும் பல்லாவரம் படிக வகையைச் சார்ந்த கருப்புச் சலவைக்கல் தூண்கள், கல்கத்தாவிலும், வில்லியம் கோட்டையிலும் இவரால் தேர்வு செய்யப்பட்டு - அதேபோல் 1732ஆம் ஆண்டில் இவற்றில் சிறந்த 32 தூண்களும் கோட்டை சதுக்கத்தினின்று (தற்போது அணிவகுப்புத் திடல்) கடற்கதவு வரை (தற்போது இரும்புக் கதவுகள் போடப்பட்டுள்ள முதன்மை வாயில்கள் வரை) சீர்வரிசைப்படி (காலனேட்) அமைக்கப்பட்டன.

1746ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்கள் சென்னையைக் கைப்பற்றினர். அப்போது இத்தூண்கள் அனைத்தும் பாண்டிச்சேரிக்குக் கொண்டு செல்லப்பட்டன. 1761ஆம் ஆண்டில் அத்தூண்கள் திரும்பச் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, மீண்டும் பழைய இடத்திலேயே பொருத்தப்பட்டன. அப்போது சென்னையின் ஆளுநராக இருந்த சர்.ஆர்தர் லாலி அவர்களது ஆணைப்படி 1910-11ல் கட்டிட மறு சீரமைப்பு பணியின்போது இவற்றில் 20-தூண்கள் சட்டமன்ற மண்டபத்தோடு இணைக்கப்பட்டு, தற்போதுள்ள கட்டட அமைப்பு உருவாக்கப்பட்டது.

1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் 1937ல் இரு அவைகள் கொண்ட சட்டமன்ற முறை அமலாக்கப்பட்டது. அப்போதும்கூட சட்டமன்ற மேலவை 1939 ஆகஸ்ட் திங்கள் வரை இம் மண்டபத்திலேயே தொடர்ந்து நடைபெற்று வந்தது. சட்டமன்றப் பேரவை 1937ஆம் ஆண்டு முதன்முதலாகக் கூடிய நேர்வில் சேப்பாக்கத்திலுள்ள பல்கலைக் கழக ஆட்சிக் குழு மண்டபத்தில் செயல்பட்டு வந்தது.

பின்னர் 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல், பேரவை அரசு தலைமைச் செயலகத்தில் இப்போதுள்ள மண்டபத்தில் செயல்பட்டது. 1952 மே திங்களில் சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள புதிய சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்கு மாற்றப்பட்டது. அதன்பின் கோட்டையிலுள்ள இம் மண்டபத்தில், சட்டமன்ற மேலவை செயல்பட்டு வந்தது. 1957ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சட்டமன்றப் பேரவை, மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள இம்மண்டபத்தில் செயல்பட ஆரம்பித்தது.

**முதல் தலைவர்**

இச் சட்டமன்ற மண்டபத்திலுள்ள மர வேலைப்பாடுகளும் கருநிற வெண்ணிறச் சலவை கற்களில் செய்யப்பட்ட வேலைப்பாடுகளும் இதன் அழகை மேம்படுத்திக் காட்டுகின்றன.

1921ல் அமைக்கப்பட்ட சென்னை சட்டமன்ற முதல் தலைவராகிய மாண்புமிகு சி. இராஜகோபாலாச்சாரியார்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவர்கள்

| வ.எண். | பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1. | திரு. புலுசு சாம்பமூர்த்தி | 1937 |
| 2. | திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை | 1946 |
| 3. | திரு. என். கோபால மேனன் | 1955 |
| 4. | டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் | 1957 |
| 5. | திரு. எஸ். செல்லபாண்டியன் | 1962 |
| 6. | திரு. சி.பா. ஆதித்தனார் | 1967 |
| 7. | புலவர் கா. கோவிந்தன் | 1969 |
| 8. | திரு. கே.ஏ. மதியழகன் | 1971 |

| வ.எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 9. | புலவர் கா. கோவிந்தன் | 1973 |
| 10. | திரு. முனுஆதி | 1977 |
| 11. | திரு. க. ராசாராம் | 1980 |
| 12. | திரு. பி.எச். பாண்டியன் | 1985 |
| 13. | டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்குடிமகன் | 1989 |
| 14. | சேடபட்டி திரு. முத்தையா | 1991 |
| 15. | திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன் | 1996 |

**அவர்கள், 1924 -25ல் சட்டமன்ற மேலவைத் தலைவராகப் பதவி வகித்த மாண்புமிகு திவான் பகதூர் டி. சாமிக்கண்ணு ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் இருக்கின்றன. புகுமுக மண்டபத்தையொட்டியுள்ள தாழ்வாரத்தில் விக்டோரியா மகாராணி அரசில் பிரதமர்களாகப் பதவி வகித்த திருவாளர்கள் பெஞ்சமின் டிஸ்ரேலி (1804- 1881), வைகவுண்ட் பார்ஸ்டன் (1784- 1865), வில்லியம் வரார்ட் கிளாட்ஸ்டன் (1809- 1868) லார்டு (மார்க்குவெஸ்) சாலிஸ்பெரி (1803- 1903) ஆகியோரின் திருவுருவப் படங்கள் உள்ளன.**

திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கர், மகாத்மா காந்தி, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரது முழு உருவ வண்ணப் படங்களும் இப்பேரவை மண்டபத்தை அலங்கரிக்கின்றன.

**பேரவை மண்டபத்தின் மேல் விதானத்திலிருந்து தொன்மைக் காலச் சிறப்பை எடுத்துக் காட்டும் வகையில் அழகிய வேலைப்பாடுகள் மிக்க 'சாண்ட்லியர்' எனும் கண்ணாடிச் சர விளக்கு மத்தியப் பகுதியில் தொங்கவிடப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான பல்புகள் அதில் பொருத்தப்பட்டுள்ளன.**

**இந்த மின் விளக்கானது எப்போதும் எரியாது; சபாநாயகர் அல்லது துணைச் சபாநாயகர் - அதாவது சபையை நடத்தக் கூடியவர்கள் அவைக்குள் நுழைந்தால்தான் எரியும்.**

### பேரவைத் தலைவரின் இருக்கை

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொலிவுக்கு அணி செய்யும் "பேரவைத் தலைவரின் இருக்கை" இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் உள்ள பேரவைத் தலைவரின் இருக்கையின் வடிவமைப்புப் போன்றது.**

**இங்கிலாந்துப் பாராளுமன்ற அவைத் தலைவராக இருந்தவர் ஸ்பீக்கர் பிராண்ட். அவருடைய பேரனான லார்டு வெலிங்டன், சென்னை மாகாண கவர்னராக இருந்தார். அவரும், அவரது மனைவியாரும் சட்டமன்றப் பேரவைக்கு அளித்த அன்புப் பரிசே, பீடுமிக்க இந்த இருக்கையாகும். 1922ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவ்வாறு பரிசளிக்கப்பட்ட அழகான கலை நுணுக்கம் மிகுந்த இருக்கைதான் "பேரவைத் தலைவரின் இருக்கை" ஆகும்.**

**அந்த இருக்கையும், அவை உறுப்பினர்கள் இருக்கைகளும் தேக்கு மரத்தால் ஆனவை.**

## தமிழ்நாடு சட்டப்பேரவை வரலாற்றில்...

- ★ இந்திய சட்டமன்றங்களின் சட்டம் இயற்றப்பட்டது ........ 1861
- ★ முப்பதாண்டுகளின்பின், சில திருத்தங்களுடன் அச்சட்டம் புதுப்பிக்கப்பட்டது. அதன்படி, சென்னையில் அமைக்கப்பட்ட ஒரே சபையான சட்டமன்றம் (Legislative Council) கூடியது (புதன்கிழமை மாலை 3 மணி). செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கூடிய இந்த முதல் கூட்டத்தில்தான் - முதலாவது வினா, வி.பாஷ்யம் ஐயங்கார் என்பாரின் சார்பில், சி. சங்கரன் நாயரால் எழுப்பப்பட்டது. ........ 17.1.1893
- ★ கவர்னரால், முதலாவது நிதிநிலை அறிக்கை (1893-94) சமர்ப்பிக்கப்பட்டது. ........ 2.5.1893
- ★ மிண்டோ -மார்லி சீர்திருத்தப்படி, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்துவதாக இந்திய சட்டமன்றங்களின் சட்டம் கொண்டுவரப்பட்டது ........ 1909
- ★ மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி, மாநிலங்களில் இரட்டை ஆட்சிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. ........ 1919

★ முதன்முதல், சென்னை மாகாணத்தில், பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் சென்னை மாகாணச் 'சட்டமன்றம்' அமைக்கப்பட்ட நாள். ...17.12.1920

★ சட்டமன்றத்தில், உறுப்பினர்கள் முதன்முதலாகத் துணைக் கேள்வி கேட்க ஒப்புதல் பெறப்பட்டது; வினா எழுப்பியோர் மட்டுமே அப்படிக் கேட்கலாம் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது ...1921

★ பெண்களுக்கும் வாக்குரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் ...1.4.1921

★ தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு, முதன் முதல் ஒரு பெண்மணி (டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ...1927

★ இப்போது நடைமுறையில் உள்ள சட்டமன்ற ஆட்சிமுறை நடைமுறைப்படுத்தப் பட்டது ...1933

★ மாகாணங்களுக்கு உரிய தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டது (Provincial Legislature). அதன்படி ஈரவை -சட்டப்பேரவை (Assembly) சட்டமன்றம் (Council) உருவாக்கப்பட்டது. இந்தக் கவுன்சிலே பின்னர் மேல்சபை என்றாயிற்று. அதுவரை ஒரே சபைதான் என்ற நிலை இருந்துவந்த நிலை இவ்வாறு மாறியது ...1935

★ செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை மண்டபம் புதுப்பிக்கப்படவே, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மண்டபத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூடிய நாள் ...16.7.1937

★ இந்திய சுதந்திரத்திற்கு முன்பு, தமிழகத்தின் பிரதமராக (Premier) இருந்த திரு. ராஜாஜி ஆட்சி கலைக்கப்பட்டு முதன்முதல் நீண்டகாலம் கவர்னர் (லார்டு எர்ஸ்கின்) ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது ... 1939 - 46

★ திரு. குமாரசாமி ராஜா அவர்கள் (காங்கிரஸ்) அரசாண்ட காலத்தில், அவர்மீது, ஆளும்கட்சி சார்பில் 14 குற்றச்சாட்டுகளோடு, திரு. பிரகாசம் அவர்கள் ஊழல் புகார் சுமத்தியது ... 1952

★ சட்டமன்றப் பேரவை, சிலகாலம் அரசினர் தோட்டத்தில் (தற்போதுள்ள கலைவாணர் அரங்கம் கட்டடத்தில்) நடைபெற்று வந்தது ...1952

★ 'தமிழ்நாடு' என்று நம் மாநிலத்தின் பெயரை மாற்றியமைக்கும் தீர்மானத்தின்மீது, மாண்புமிகு தமிழக முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றிய நாள்: ...18.7.1967

★ உடல்நலக் குறைவு காரணமாக அமெரிக்க நாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய மாண்புமிகு முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள், முதன்முதல் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 'தமிழ்நாடு' பெயர் சூட்டு விழாகூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியது ...1.12.1968

★ இந்திய சுதந்திரதின வெள்ளி விழா ...1972

★ சுதந்திர இந்தியாவில், முதன்முதல் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவராட்சி பிறப்பிக்கப்பட்டது ... 31.1.1976 முதல் 30.6.1977 வரை

★ அதன்பின், இரண்டாவது முறையாகத் தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்பட்டது ... .172.1980 முதல் 9.6.1980 வரை

★ சட்டமன்ற மேலவை கலைக்கப்பட்டது ...1986

★ சட்டப்பேரவை பொன்விழா ஆண்டு ...1987

★ அதற்கான வண்ணமிகு விழா, சட்டப்பேரவை மண்டபத்திலேயே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் கொண்டாடப்பட்டது. ...1989

★ தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி ... 30.1.1988 முதல் 27.1.1989 வரை

★ தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் சிறப்புறக் கொண்டாடப்பட்டது ...14.7.1997

சட்டமன்றப் பவளவிழாவில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை அடுத்த இதழில்...

- தொகுப்பு: 'சோழராஜா'

# வாசகர் இதயம்

கூட்டுறவையும், பேதமற்ற வாழ்வையும் வலியுறுத்தும் வகையில் வெளியிடப்பட்டிருந்த 'தமிழரசு' வண்ணமுகப்பு பிரமாதம்.

*ச.தீபா*
செங்கற்பட்டு

திருநீற்றுப் பச்சிலை பற்றிய மருத்துவக் கட்டுரையை டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ் அவர்கள் மிகவும் பயன்படும் விதத்தில் எழுதியிருந்தார்.

*ஜி. ராஜா*
நாமக்கல்

தங்களுடைய மருத்துவப் பகுதி கட்டுரை விஷயங்கள் மூலம் எங்கள் தாத்தா உடல்நிலை முன்னேற்றம் அடைந்து வருகிறது, தாத்தாவின் சார்பில் நன்றி.

*தே. மந்திரி*
பொள்ளாச்சி

'தமிழரசு' ஒவ்வொரு இதழிலும் பல புதிய பகுதிகளைத் தருகிறீர்கள்; காட்சிக்கும், கருத்துக்கும் இனிய விருந்தாகத் திகழும் தமிழரசின் பணிக்கு எனது நன்றி. நன்றி!

*ஜெ. சரவணன்*
திருப்பத்தூர்.

சாதி வேறுபாடுகளைச் சாடும் கவிதையடிகள் தொகுப்பு அருமை.

*ப.மு. பாண்டியன்*
கரப்பாடி.

'அன்பு கொள்வோம்' என்ற தலைப்பில் முதல்வர் கலைஞர் எழுதியதில் இருந்த அறிவுரையும், கருத்துரைகளும் அற்புதமாக இருந்தன.

*ப. அருணாசல சண்முகம்*
வீரனூர்.

துறைதோறும் தொழிலாளர் நலன் பற்றிய கட்டுரை, தொழிலாளர் நலனில் அரசு கொண்டுள்ள நாட்டத்தைக் காட்டியது. வனத்துறையில் உள்ள தினக்கூலித் தொழிலாளர்களையும் கவனித்தால் நல்லது.

*கி. ராமதாஸ்*
சென்னை23

மேதினத் 'தமிழரசில்' உழைப்பாளர் புகழ்பாடும் வகையில் இருந்த கட்டுரைகளும், கவிதைகளும், ஓவியங்களும் கருத்தைக் கவர்ந்தன.

*புலவர் கு. கலியமூர்த்தி*
மல்லசமுத்திரம்.

'தமிழரசின்' ஓராண்டு சாதனை மலரைப் பாதுகாப்பாக பைண்ட் பண்ணி வைத்துவிட்டேன்.

*தமிழ்ப்பரிதி*
நெல்லிக்குப்பம்

சுற்றுப்புறச் சுகாதாரம் குறித்து வெளியிட்டிருந்த கட்டுரை மிகமிகப் பயனுள்ளது.

*எஸ். நாகராஜன்*
மேலப்பாதி

மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க, அதிகாரிகளோடு தொடர்புகொண்டு விளக்கம் தரும் தமிழரசே, வளரட்டும் உனது பணி! வாழ்த்துவதே எங்கள் பணி!

*க. கோடீசுவரன்*
தக்களூர்.


'தமிழரசு' இதழுக்கு இதழ் மெருகு கூடுகிறது. நல்வாழ்த்துகள்!

*பா. சந்திரசேகரன்*
சென்னை63.


மே மாத தமிழரசுவின் — அரசின் ஓராண்டு சாதனைகளைப் படித்தேன். அப்பப்பா. என்ன அருமை!

*வெ. கனகராஜ்*
அத்திப்பள்ளம்.

# Vintage hospitality By The Taj



*The Savoy Hotel*



*The Taj Garden Retreat*

*Far from the madding crowd, amidst the tranquil surroundings of the lofty Nilgiris, experience a gracious ambience.*

*At the Taj Garden Retreat, Coonoor.*

*Or surrender to the charm of old English living.*

*At the Savoy Hotel, Ooty.*

**SAVOY HOTEL**
*(The Taj Group of Hotels)*
77, Sylks Road, Ooty, Nilgiris District,
Tamil Nadu 643 001. Tel : (423) 44142

★★★

**TAJ GARDEN RETREAT**
*(The Taj Leisure Hotels)*
Upper Coonoor, Church Road, Nilgiris,
Tamil Nadu 643 101. Tel : (423) 30021

**FOR RESERVATION CALL :**

• Mumbai : 202 3366/202 2524 • Delhi : 332 2333/332 2256 • Chennai : 827 2827
• Bangalore : 225 5055 • Calcutta : 248 3939



# தலைவர்களின் பெயரில் அறக்கட்டளைகள் 28

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5-6-1997ஆம் நாள் கூட்டிய அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் கூட்டத்தில் பெரும்பாலான தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கிணங்க மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வைக்கப்பட்டுள்ள பெயர்களை அகற்றுவதென்றும், அகற்றப்பட்ட தலைவர்களின் பெயர்களால் - ஒவ்வொரு தலைவரின் பெயராலும் 25 (இருபத்தைந்து) இலட்ச ரூபாய் வைப்பு நிதி வழங்கி - 15 பல்கலைக்கழகங்களில் 28 அறக்கட்டளைகள் தொடங்குவதென்றும் 1.7.97ல் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் கூடிய அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு தலைவர் பெயரிலும் வைப்பு நிதியாக வைக்கப்படும் 25 இலட்ச ரூபாயிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகையிலிருந்து அந்தப் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட கல்லூரிகளின் சிறந்த மாணவர்களுக்கு உதவித்தொகை (SCHOLARSHIP) வழங்கப்படும். இந்த உதவித் தொகையில் கல்விக் கட்டணம், புத்தகச் செலவு மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவை அடங்கும்.

### பல்கலைக்கழகங்களும் அறக்கட்டளைகளின் பெயர்களும்

அறக்கட்டளை தொடங்கப்படும் பல்கலைக் கழகங்களும் அறக்கட்டளைகளுக்கான பெயர்களும் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 1. அண்ணா பல்கலைக்கழகம். | 1. காயிதே மில்லத்<br>2. எம்.ஜி.ஆர். |
| 2. சென்னை பல்கலைக்கழகம். | 1. அறிஞர் அண்ணா<br>2. சம்புவராயர் |
| 3. டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை. | 1. ஜீவா |
| 4. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம். | 1. வள்ளலார்<br>2. இராமசாமி படையாட்சியார் |
| 5. பாரதியார் பல்கலைக்கழகம், கோவை. | 1. காமராசர் |
| 6. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை. | 1. பெரியார் |
| 7. பெரியார் பல்கலைக் கழகம், சேலம். | 1. டாக்டர் அம்பேத்கர்<br>2. இராஜாஜி |
| 8. மதுரை காமராசர் பல்கலைக்கழகம். | 1. மருதுபாண்டியன்<br>2. மாவீரன் சுந்தரலிங்கம்<br>3. மன்னர் திருமலை |
| 9. பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி. | 1. பெரும்பிடுகு முத்தரையர்<br>2. தீரன் சின்னமலை<br>3. வீரன் அழகுமுத்துக்கோன் |
| 10. அன்னை தெரசா பல்கலைக்கழகம். | 1. இராணி மங்கம்மாள் |
| 11. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி. | 1. கட்டபொம்மன்<br>2. நேசமணி<br>3. மன்னர் பூலித்தேவன் |
| 12. அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி. | 1. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்<br>2. சிதம்பரனார் |
| 13. தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். | 1. பாரதியார்<br>2. ஏ.டி. பன்னீர் செல்வம் |

14. எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை. — 1. ராஜீவ்காந்தி, 2. அன்னை சத்தியா

15. தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகம், சென்னை. — 1. பட்டுக்கோட்டை அழகிரி

## போக்குவரத்துக் கழகங்கள் பெயர் மாற்றம்

தலைவர்களின் பெயராலும், அரசர்களின் பெயராலும், தளபதிகளின் பெயராலும் இயங்கும் போக்குவரத்துக் கழகங்கள், அந்தந்தப் பகுதிகளில், பூகோள அமைப்புக்கிணங்க பின்வருமாறு பெயர் மாற்றம் செய்யப்படும்:-

1. பல்லவன்
2. அம்பேத்கர் : மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை.

3. திருவள்ளுவர்
4. ராஜீவ்காந்தி : அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு.

5. சேரன்
6. மகாகவி பாரதியார்
7. ஜீவா : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை.

8. அண்ணா
9. அன்னை சத்யா : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்.

10. தந்தை பெரியார்
11. பட்டுக்கோட்டை அழகிரி
12. எம்.ஜி.ஆர். : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்.

13. சோழன்
14. தீரன் சின்னமலை
15. மருதுபாண்டியன்
16. வீரன் அழகுமுத்துக்கோன்: தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்.

17. பாண்டியன்
18. கட்டபொம்மன்,
19. நேசமணி
20. இராணி மங்கம்மாள்,
21. மாவீரன் சுந்தரலிங்கம் : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை.

## மாவட்டங்களின் பெயர்கள் மாற்றம்

தலைவர்களின் பெயர்களில் அமைந்துள்ள மாவட்டங்களின் பெயர்கள் அந்த மாவட்டத் தலைநகரங்களின் பெயர்களால் அமையும். அவை பின்வருமாறு:

1. அண்ணா மாவட்டம் : காஞ்சிபுரம் மாவட்டம்
2. எம்.ஜி.ஆர். மாவட்டம் : திருவள்ளூர் மாவட்டம்
3. வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் : வேலூர் மாவட்டம்
4. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் : திருவண்ணாமலை மாவட்டம்
5. தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் : கடலூர் மாவட்டம்
6. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் : விழுப்புரம் மாவட்டம்
7. திருவாரூர் ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம் : திருவாரூர் மாவட்டம்
8. நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் : நாகப்பட்டினம் மாவட்டம்
9. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம்
10. கரூர் தீரன் சின்னமலை மாவட்டம் : கரூர் மாவட்டம்
11. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் : பெரம்பலூர் மாவட்டம்
12. வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம் : தேனி மாவட்டம்
13. திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் : திண்டுக்கல் மாவட்டம்
14. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் : சிவகங்கை மாவட்டம்
15. காமராஜர் மாவட்டம் : விருதுநகர் மாவட்டம்
16. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் : திருநெல்வேலி மாவட்டம்
17. சிதம்பரனார் மாவட்டம் : தூத்துக்குடி மாவட்டம்
18. இராஜாஜி மாவட்டம் : நாமக்கல் மாவட்டம்
19. பெரியார் மாவட்டம் : ஈரோடு மாவட்டம்

சென்னை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கோவை, மதுரை, சேலம், தருமபுரி, நீலகிரி ஆகிய 10 மாவட்டங்களின் பெயர்கள் அப்படியே நீடிக்கும். ★

# வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் லிமிடெட்

**சத்துவாச்சாரி, வேலூர்-632 009.**

## தமிழகத்திலேயே அதிகமான பால் உற்பத்திகொண்ட மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தற்போது இவ்வொன்றியத்தில் செயல்படும் சங்கங்கள் | : | 1035 |
| 2. | நாளொன்றுக்கு பால் கொள்முதல் | : | 2,34,000 லிட்டர்கள் |
| 3. | வாரந்தோறும் கிராம பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் மூலம் சென்றடையும் பணம் | : | ரூ.1.00 கோடி |
| 4. | கறவை இனங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் வசதி கொண்ட சங்கங்கள் | : | 308 |
| 5. | மாதந்தோறும் அங்கத்தினர் கால்நடைகளுக்கு செய்யப்படும் செயற்கைமுறை கருவூட்டல்களின் எண்ணிக்கை | : | 15,000 |
| 6. | கால்நடை பராமரிப்பு பணிகள் | : | 800 சங்கங்கள் |
| 7. | கன்று வளர்ப்பு திட்டத்தில் 100% மானியத்தில் சேர்க்கப்பட்ட கன்றுகள் எண்ணிக்கை | : | 225 (800 சேர்க்கப்பட உள்ளது) |
| 8. | நகர்புறங்களில் பால் விற்பனை நாள் ஒன்றுக்கு | : | 40,000 லிட்டர்கள் |

- ❑ பால் உற்பத்தியை மேம்படுத்த 25 ஆண்டுகளாக அயராது முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.
- ❑ கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் பாலை கொள்முதல் செய்து நிலையான வருவாயை ஏழை எளியோர்க்கு அளித்து வருகிறது.
- ❑ வாய்ப்புள்ள கிராமங்களை ஆய்வு செய்து புதிய சங்கங்கள் துவக்கப்படுகின்றன.
- ❑ பலகோடி ரூபாய் மூலதனத்தில் 4 பால் குளிரூட்டும் நிலையங்களும் 1 பால்பத நிலையமும் இயங்கி வருகிறது.
- ❑ தனியார் பால்பண்ணை அச்சுறுத்தலுக்கும், பொய்யான விளம்பரங்களுக்கும் மாற்று சவாலாக செயல்பட்டு வருகிறது.
- ❑ பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள், தற்போது ஏற்பட்டுள்ள தனிநபர் ஆக்ரமிப்புகளை கண்டு ஏமாறாமல் தொடர்ந்து உங்களின் நிறுவனமாகிய இவ்வொன்றியத்திற்கு நிலையான ஆதரவு நல்கிட வேண்டுகிறோம்.

**“நிலையான, தரமான பால் - ஆவின் பால்”**

ஏ.எம்.ஆசைதம்பி
நிர்வாக இயக்குநர்,
வேலூர் மா.பா.உ.கூ.ஒன்றியம்

# ❑ பொது விநியோகமுறை கணினி மயமாக்கப்படும்!

# ❑ போலி குடும்ப அட்டைகள் ஒழிக்கப்படும்!

## - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உரை

நம்முடைய மாநிலம் முழுவதும் அமைந்துள்ள நியாய விலைக் கடைகளுடைய எண்ணிக்கை 23,125. அவற்றில் கிராமப்பகுதியிலே உள்ள கடைகள் 18,242 நகர்ப் புறங்களிலே உள்ள கடைகள் 4,883.

இப்பொழுது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் குறைந்தது ஒரு நியாய விலைக்கடை வீதம் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வார்டிலும் குறைந்தது ஒரு நியாய விலைக்கடையாவது இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் கடைகள் அமைக்கப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில் ஒரு கடைக்குக் குடும்ப அட்டைகள் 800-க்கு அதிகமாகாமலும் 500-க்கு குறையாமலும் இருக்குமாறு திருத்தி அமைக்கப்பட உள்ளது. அந்தப் பணிகள் இப்போது தொடங்கப்பட்டு சில இடங்களில் நடைபெற்று வருகிறது. இவ்வாறு திருத்தி அமைக்கிற நேரத்தில் தற்போது இயங்கிக்கொண்டிருக்கிற கடைகள் மூடப்படக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

அப்படி கடைகளைத் திருத்தி அமைக்கும்போது எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் நியாய விலைக்கடைக்குச் சென்று பொருள்களைப் பெறுவதற்கு 2 கிலோ மீட்டருக்கு மேல் செல்லக்கூடாது என்ற அடிப்படையிலே இந்தக் கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவ்வாறு அவை அமைக்கப்பட்டு வருகின்றன.

### 20 கிலோ அரிசி யாருக்கு?

இப்போது ஒரு யூனிட் உள்ள குடும்பத்திற்கு 12 கிலோ அரிசி தருகிறோம். ஒரு யூனிட் என்பது பெரியவராக ஒருவர் இருந்தால் ஒரு யூனிட். அந்த யூனிட் ஒன்று உள்ள குடும்பத்திற்கு 12 கிலோ அரிசி.

ஒன்றரை யூனிட் உள்ள குடும்பத்திற்கு 14 கிலோ அரிசி. ஒன்றரை என்றால், இந்த அரை யூனிட் என்பது சிறியவர்களை-குழந்தைகளைக் குறிப்பிடும். ஒன்றரை யூனிட் உள்ள குடும்பத்திற்கு 14 கிலோ அரிசி.

இரண்டு யூனிட் உள்ள குடும்பத்திற்கு 16 கிலோ அரிசி. இரண்டரை யூனிட் உள்ள குடும்பத்திற்கு 18 கிலோ அரிசி, 3 யூனிட்டும் அதற்கு மேலும் உள்ள குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி. மூன்று பெரியவர்கள் அதற்கு மேல் எவ்வளவு பேர் இருந்தாலும் இன்றைக்கு அந்தக்குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

தற்போது ஏறத்தாழ ஒரு கோடியே 50 இலட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அவைகளிலே 20 இலட்சத்திற்கு மேற்பட்டவை போலி அட்டைகள் என்று உணரப்பட்டுள்ளது.

போலி குடும்ப அட்டைகள் அரசின் நிதி ஆதாரத்தை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் எல்லாம் புரிந்துகொள்ளக்கூடும்.

### பொது விநியோக முறை கம்ப்யூட்டர் மயமாகும்!

போலி அட்டைகளைக் களையும் ஒரு முயற்சியாக பொது விநியோக முறையைக் கம்ப்யூட்டர் மயமாக்க-அதாவது கணினி மயமாக்க அரசு முடிவு செய்துள்ளது.

வீட்டுக்கு வீடு கணக்கெடுக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் விபரங்கள் எல்காட் நிறுவனத்தின் உதவியோடு கணினி மயமாக ஆக்கப்பட்டு வருகின்றன. இப்படி கணினி மயமாக்கப்பட்ட விவரங்களோடு குடும்பத்தலைவரின் புகைப்படத்துடன் கூடிய புதிய குடும்ப அட்டைகள் இன்று வழங்கப்படுகின்றன.

இந்தப்புதிய குடும்ப அட்டைகளின் மூலம் போலி குடும்ப அட்டைகள் முழுவதுமாக ஒழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1250 ரூபாய் வரையிலே மாத வருமானம் உள்ளவர்கள் ஏழை-எளிய மக்கள் என்று இப்போது நாங்கள் கருதி அந்தப் பட்டியலிலே வைத்திருக்கிறோம்.

1251 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை மாத வருமானம் பெறுகின்றவர்களை நடுத்தர வருவாய்ப் பட்டியலிலே வைத்திருக்கிறோம்.

மாத வருமானம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் பெறுவோர் வசதி படைத்தவர்கள் - என்றும் மூன்று பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே குடும்பஅட்டைகள் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

### நிறங்களும், முறைகளும்!

1250 ரூபாய் வரையிலே மாத வருமானம் பெறுகின்ற ஏழை-எளியோர் பட்டியலிலே இருக்கின்றவர்களுக்கு இளம் சிவப்பு நிறத்திலே அட்டைகள் வழங்கப்படுகின்றன. அதாவது வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு சிவப்பு நிறத்திலே அட்டை-வறுமையின் நிறம் சிவப்பு என்பதற்கு அடையாளமாக சிவப்பு அட்டைகள்!

நடுத்தரப் பிரிவினருக்கு மஞ்சள் நிறத்தில் அட்டைகள் வழங்கப்படும்.

வசதி படைத்தவர்களுக்குப் பச்சை நிறத்தில் அட்டைகள், இவர்கள் வளமாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அவர்களுக்குப் பச்சை நிறத்தில் அட்டைகள் வழங்கப்படும்.

இந்தக் குடும்ப அட்டைகளில் குடும்பத் தலைவருடைய புகைப்படம் கணினி மூலம் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதன் நோக்கம் புழக்கத்திலே உள்ள போலி அட்டைகளை முழுவதுமாகக் களைந்து பொது விநியோகத் திட்டத்தினுடைய பயன் ஏழை-எளிய மக்களுக்கு முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்பதுதான்.

அதன்படி சிவப்புநிறக் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி உள்பட அனைத்து அத்யாவசியப் பொருள்களும் அரசு நிர்ணயித்துள்ள மான்ய விலையில் வழங்கப்படும்.

மஞ்சள் நிற குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசியும் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் வழங்கப்படும். ஆனால் அதிலே ஒன்று; அவர்களுக்கும் சிவப்பு நிற அட்டைக்கு உள்ளதைப் போல எல்லா அத்தியாவசியப் பொருள் களும்-அரிசியும் வழங்கப்படும் என்றாலும்கூட-அவர்களுடைய விருப்பத்தின்படி அவர்கள் அரிசியையோ அல்லது அரிசிக்குப்

பதிலாகக் கூடுதலாக மூன்று கிலோ சர்க்கரையையோ, ஐந்து லிட்டர் மண்ணெண்ணையையோ அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்-அரிசி வேண்டாம் என்று சொல்லி விடுவார்களேயானால்.

பச்சை நிறக் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி தவிர-அரிசி நிச்சயம் கொடுக்கப்பட மாட்டாது-அது தவிர ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் பச்சை அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும்.

**மூன்று கட்டங்களாக வழங்கப்படும்**

இந்தப் புதிய குடும்ப அட்டைகள் வழங்குகின்ற பணி மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

முதல் கட்டம் சென்னையின் புறநகர்ப் பகுதிகள் உள்பட, சென்னை மாநகரத்திலும், சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு மாநகராட்சிப் பகுதிகளிலும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன.

இரண்டாவது கட்டமாகத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் மாவட்டத்தலைவநகரங்களிலும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட இருக்கின்றன.

மூன்றாவது கட்டமாக - மாநிலத்தின் இதர பகுதிகளான நகரப் பஞ்சாயத்துகளிலும், கிராமப் பஞ்சாயத்துகளிலும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட இருக்கின்றன.

**அரிசி போடுவதைக் குறைக்கவில்லை**

இன்னொன்று முக்கியமாக உங்களுக்குச் சொல்லவேண்டும். நடைபெறுகின்ற தவறான பிரச்சாரத்திற்கு விளக்கமளிக்கின்ற வகையிலே, ஒன்றைக் கூற விரும்புகின்றேன். ஏதோ இந்த ஆட்சி வந்த பிறகு அரிசி போடுவதைக் குறைத்துவிட்டோம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. நான் உங்களுக்கு ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன்.

1991ஆம் ஆண்டு மொத்தமாக விநியோகிக்கப்பட்ட அரிசியின் அளவு ஒரு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று நாற்பத்தி நான்கு டன்கள்.

1992ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்றி இரண்டு டன்கள்.

1993இல் ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்பத்து ஐந்து டன்கள்.

1994ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து ஆறாயிரத்து எழுநூற்றி எழுபது டன்கள்.

1995இல் ஒரு இலட்சத்து இருபத்தைந்து ஆயிரத்து முன்னூற்றி இருபத்தெட்டு டன்கள்.

1996இல் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, இரண்டு இலட்சத்து ஆயிரத்து எண்பது டன்கள் அரிசி விநியோகிக்கப்படுகிறது-

-என்ற விபரத்தை உங்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 23 ஆயிரத்துக்கு மேற்பட்ட நகரங்கள், கிராமங்களிலே இருக்கிற நியாய விலைக்கடைகளில் எல்லாக் கடைகளிலும் நியாயமாக எல்லாம் நடக்கும் என்று நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சில இடங்களிலே தவறுகள் நடைபெறக்கூடும். அப்படி நடைபெறுகின்ற தவறுகளைக் களைவதற்கான முயற்சிகள் இந்த அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த நான்கு ஐந்து மாத காலமாக நான் நேரடியாகவே முயற்சி எடுத்துக்கொண்டு, அந்த முயற்சிக்கு உறுதுணையாக நம்முடைய தம்பி உணவுத்துறை அமைச்சர் நேரு அவர்களும், அதிகாரிகளும் என்னோடு ஒத்துழைத்ததன் காரணமாக, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நியாய விலைக் கடைகளில் எந்தவிதமான புகாரும் இல்லை. ஒன்றிரண்டு இருந்தாலும் அவைகள் சுட்டிக்காட்டப்படும்போது களையப்படுகின்றன என்பதை எடுத்துக்கூறி இந்தக் குடும்ப அட்டைகளை வழங்குகிற நிகழ்ச்சியைத் தொடங்கிவைக்கின்றேன்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ★

"

***புதிய ஆட்சி மலர்ந்த பிறகு, ரேஷன் கடைகளில் வழங்கும் அரிசி குறைக்கப் படவில்லை. கூடுதலாகவே வழங்கப்பட்டு வருகிறது. போலி குடும்ப அட்டைகளை ஒழிக்க, கணிப்பொறி மூலம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று மூன்று வண்ணங்களில் குடும்ப அட்டைகள் வழங்கும் பணியை 1.7.97 அன்று துவக்கி வைத்துப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். இவ்விழாவில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.கே. என். நேரு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மு. க. ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். அவ்விழாவில் முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் இது.***

"

# "நியாய விலைக்கடைகளில் கூடுதல் அரிசி வழங்கப்படுகிறது!"

# மேதைகள் வாழ்விலே!



கவிமணி
தேசிக விநாயகம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் நண்பர் ஒருவர், தன் வீட்டில் இடவசதி இன்மையால், கவிமணியின் உதவியை நாடினார். அவரும் அவ்விருந்தைத் தமது வீட்டிலேயே நடத்திக்கொள்ள அனுமதித்தார். அதுமட்டுமல்ல; ஏதோ தம்வீட்டுக்கு வருவோரை உபசரிப்பதுபோல, இவரும் விருந்துக்கு வந்தோரை ஓடிஓடி உபசரித்தார்.

அப்போது கவிமணிக்கு ஒரு 'தந்தி' வந்தது; அதை வாங்கிப் பிரித்துப் படித்த அவர், மறுபடி மடித்துச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, விருந்துபசரிப்பில் மும்முரமானார்.

ஒருவழியாக விருந்து முடிந்தது; கடைசியாகப் பார்த்தால் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைக் காணோம்! தன் மனைவியிடம்கூட சொல்லிக்கொள்ளாமல் நாகர்கோயிலுக்குப் போய்விட்டிருந்தார் அவர்!

காரணம் என்ன தெரியுமா ?...

கவிமணியின் மருமகள், நாகர்கோயிலில் அகால மரணம் அடைந்த செய்திதான் தந்தி மூலம் வந்திருந்தது!

(கவிமணி பிறந்த நாள் : 28.7.1897)

□



நாவலர்
ச. சோ. பாரதியார்

தமிழ் மீதுற்ற காதலால்-இந்திமீது கடும் எதிர்ப்புக் காட்டி வந்தவர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார். தந்தை பெரியார் மீதும் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த இவர், காந்தியத்தின்மீது பற்று மிகவே-அவரோடு முரண்படலானார்.

ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம்தான் சோமசுந்தர பாரதியாருக்கு 'நாவலர்' பட்டம் சூட்டி மகிழ்ந்தது.

சென்னைத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் ஒரு விழாவில் அவருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தது.

அந்த விழாவில் பேசும்போது, அதுபற்றி நாவலர் சோமசுந்தர பாரதியார் இவ்வாறு குறிப்பிட்டார்: "இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டிருக்கும் எனக்குக் கேடயம் எதற்கு? வாள் அல்லவா கொடுத்திருக்கவேண்டும்?"

(நாவலர் ச.சோ.பாரதியார் பிறந்த நாள் : 27.7.1876)

□



மறைமலை
அடிகளார்

தனித்தமிழ்ப் பற்றாளரான மறைமலையடிகளார் மீது மிகுந்த பற்றுவைத்திருந்தார், பொதுவுடைமைக்கொள்கை மீது அகலாப் பற்றோடிருந்த ப.ஜீவானந்தம். இதனாலேயே அவர் தனது பெயரை 'உயிரின்பன்' என்று மாற்றி வைத்துக்கொண்டதும் உண்டு.

தனித்தமிழ் ஆர்வலர் எனினும், கம்பனின் கற்பனை வளம், மறைமலை அடிகளாருக்கு அவ்வளவாகப் பிடிக்காது.

தமிழில் பிறமொழிக் கலப்பை அடியோடு வெறுத்துவந்த மறைமலை அடிகளார் வீட்டுக்கு ஒருநாள் அவரைக் காணச்சென்றார் ஜீவானந்தம். கதவைத் தட்டினார்.

'யாரது-போஸ்ட்மேனா ?' என்ற கேள்வி உள்ளிருந்து வந்தது. அடிகளார் ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தி வினாத் தொடுக்கிறாரே என்று அசந்தே போய்விட்டார் ஜீவானந்தம்!

தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும், வடமொழியிலும்கூட பெரும்புலமை பெற்றிருந்தவர் மறைமலை அடிகளார்!

(மறைமலை அடிகள் பிறந்த நாள் : 15.7.1876)



மாயூரம் வேதநாயகம்

'பிரதாப முதலியார் சரித்திரத்தை' எழுதி முதல் தமிழ் புதினப் படைப்பாளர் என்கிற பெருமை பெற்றவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

முன்சீஃபாகப் பணியாற்றி வந்தாலும், முத்தமிழிலும் வல்லவராகத் திகழ்ந்தார். தமிழ் மட்டுமல்ல; ஆங்கிலமும், பிரஞ்சு மொழியும்கூட இவருக்கு நன்கு தெரியும்.

இவர் வாழ்ந்த காலம் வெள்ளையராட்சிக்காலம்; எனவே, தனது முன்சீஃப் பதவி போனதை-"அடிமைச்சீட்டு கிழிபட்டது" என்று மகிழ்வுடன் குறிப்பிட்டார், இவர்.

தான் தீர்ப்புரைத்த ஒரு வழக்கில் தீர்ப்புரைத்தமை பற்றி, ஒருமுறை அவர் சொன்னது என்ன தெரியுமா ?

"இந்த வழக்கில் உண்மையைக் காணுவது சற்றுக் கடினமாகத்தான் இருந்தது; நேற்றிரவு, வாதி என் வீட்டிற்கு வந்து லஞ்சம் கொடுத்த போதுதான் எனக்கு உண்மையே தெரிந்தது; ஆகவே, நீதியை எதிர்த் தரப்பிற்கும், மன்னிப்பை வாதிக்கும் அளித்தேன்!"

(வேதநாயகம் பிள்ளை மறைந்த நாள் : 21.7.1988)

□

தமிழறிஞர் வி. கோ. சூரியநாராயணன் என்ற தமது பெயரையே 'பரிதிமாற்கலைஞர்' என்று மாற்றிக்கொள்ளும் அளவிற்கு தனித்தமிழ்க் கொள்கை உடையவராக இருந்தார், அவர்.



பரிதிமாற் கலைஞர்

ஆங்கிலத்திலும், வடமொழியிலும்கூட திறம்பெற்றிருந்தார் இவர். சென்னையில் உள்ள கிறித்துவக் கல்லூரியில் மாணவராக இருந்த இளமைக் காலத்தில், அவர் வாழ்வில் சுவைமிக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

கல்லூரித் தலைவரான டாக்டர் மில்லர் என்ற ஆங்கிலேயர், மாணவர் வருகைக் குறிப்பேட்டைப் படித்து, வருகையைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். சூரியநாராயணன் என்று உச்சரிப்பது அவருக்குச் சிறிது கடினமாக இருந்தது, "உன் பெயரை மாற்றிவைத்துக் கொள்ளேன் ?" என்றார் அவர்.

மறுநாளே, வருகைக் குறிப்பேட்டில் அந்தப்பெயர் - 'சூரியநாராயண சாஸ்திரியார்' என்றிருந்தது! "நீங்கள்தானே மாற்றிவைத்துக் கொள்ளச் சொன்னீர்கள்!" என்றார், பரிதிமாற் கலைஞர். வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது. (பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள் : 8-7-1870) □



மேனாட்டறிஞர் இங்கர்சால்

அமெரிக்கநாட்டு நியூயார்க் மாவட்டத்தில் உள்ள டிரஸ்டன் நகரில் பிறந்தவரான ராபர்ட் கிரீன் இங்கர்சாலின் தந்தையார் ஜான் இங்கர்சால், கிறிஸ்தவ மதத்தின்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆனால் இங்கர்சால் சாதிமதக்கோட்பாடுகளின் மீது பெரிதும் அவநம்பிக்கை கொண்டிருந்தார். மதவாதிகள், மக்களை அச்சுறுத்தியே மதங்களையும், கடவுள் நம்பிக்கையையும் பரப்பிவருகிறார்கள்-என்றெல்லாம் வெளிப்படையாகப் பேசிடலானார். மதவாதிகளின் கொடுமைகளையும் சுட்டிக்காட்டி கண்டித்தார்.

தன்னை நாத்திகன் என்று சொல்லிக்கொள்ளுவதில் பெருமைப்பட்ட இங்கர்சாலுக்கும், அவருடைய தந்தையாருக்கும் இடையிலேயே இதுபற்றிப் பலமுறை வாக்குவாதங்கள்-அனல்பறக்க நடந்ததுண்டு.

அந்தத் தந்தையாரின் கடைசிக் காலத்தில் என்ன நடந்தது தெரியுமோ ? மதவாதியான அவரும் நாத்திகக் கருத்துகளை ஏற்றுக்கொள்பவராக மாறிவிட்டார்!

ஆக, அங்கேயும் ஒரு 'தகப்பன் சாமி'!

(இங்கர்சால் பிறந்த நாள் : 11.8.1833-மறைந்த நாள் : 20.7.1899)

□

முதலமைச்சராக இருந்த நேரம். காமராசர் தனது காரிலேயே நீண்ட தூரச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பினார். பயணக் களைப்பால் சிறிது கண்ணயர்ந்திருந்த அவர், நீண்டநேரம் கார் ஒரு இடத்திலேயே நிற்பதைப் போல் உணர்ந்து விழித்தார்.



பெருந்தலைவர் காமராசர்

"டிரைவர், என்னப்பா ஆச்சு! எங்கே வந்துருக்கம்-ஏன் நிக்கிறே ?" என்று கேட்டார்.

'சைதாப்பேட்டை பாலம் வந்தாச்சுங்க, ஏதோ, ஆக்ஸிடெண்ட் போலிருக்குங்க ஐயா; டிராபிக் ஜாம் ஆயிருக்கு!' என்றார் டிரைவர்.

எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தார் காமராசர். போக்குவரத்து ஸ்தம்பித்திருந்தது. போலீசார் யாரையும் காணோம். காரை விட்டுக் கீழே இறங்கிய அவர், வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு நேரே விடுவிடென்று சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்தார்.

அப்போது அங்கே 'டூட்டி' யில் இருந்த மூன்றே மூன்று போலீசார், முதலமைச்சரே கண்ணெதிரில் வந்து நிற்பதைக்கண்டு பதறிக்கொண்டு எழுந்தனர்.

"ரோடு பூரா வண்டி வாகனம் போகமுடியாம நெரிசலா அடைஞ்சுபோய்க்கிடக்கு, இங்கே உட்கார்ந்துகிட்டு என்ன பண்றீங்கங்கிறேன் ? வாருமய்யா வெளியே!"- என்று சொல்லிவிட்டு அவர் வெளியே வர, போலீசாரும் உடன் ஓடிவந்தனர்.

போக்குவரத்தைச் செம்மைப்படுத்துவதில், தாம் ஒரு முதலமைச்சர் என்பதையும் மறந்து சுறுசுறுப்போடு, அவர்களோடு இணைந்து செயல்படலானார் காமராசர். அரைமணி நேரத்தில் சாலைப் போக்குவரத்து சரிசெய்யப்பட்டது.

(பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் : 15-7-1903)


தொகுப்பு :பி.எல். ராஜேந்திரன்

KUIL


# ARASAN


KUIL

**THE KING OF FIREWORKS**



KUIL BRAND





**THE ARASAN FIREWORKS FACTORY,**

7/45-A, SARASWATHIPALAYAM,
POST BOX NO. 126,
SIVAKASI - 626 123.

(Tamilnadu) (S. India)

Fax : 04562-72441
04562-72055

Tel : KUIL
Plone : 20287

# மொழி வளர்ச்சி

## இன்றைய நிலையும் எதிர்காலத் தேவைகளும்

முனைவர் ம. இராசேந்திரன்

ஓர் அரசு, ஒளிவுமறைவற்று மக்களுக்குத் தொண்டாற்ற மக்கள் மொழியில் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளல் இன்றியமையாதது. மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த, அன்றாடம் வெளிப்படும் அறிவியல் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் அறிமுகமாக வேண்டும். சுயசிந்தனையாளர்களாக, புதியன படைப்பவர்களாக மாணவர்கள் உருவாகத் தாய்மொழி வழிக் கல்வி தான் பயன்பட முடியும். எனவே ஆட்சிமொழியாக, அறிவியல் மொழியாக, பயிற்றுமொழியாகத் தமிழைப் பயன்பாட்டுமொழியாக வளர்த்தெடுக்க வேண்டியது இன்றைய உடனடித் தேவையாக இருக்கிறது. அவ்வகையில் தமிழை வளர்த்தெடுக்க மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக இருக்கிறது.

### ஆட்சித் தமிழும் மொழி பெயர்ப்பும்

அரசின் அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் மொழியில் அமைவதற்கு ஆட்சித்தமிழ் பயன்படுகிறது. ஆட்சித்தமிழை உருவாக்குவதில் தலைமைச் செயலகத்தில் உள்ள தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் ஓர் அலகாக இயங்கிவரும் மொழி பெயர்ப்புத்துறை பணியாற்றி வருகிறது.

சட்டம் தொடர்பானவற்றைத் தமிழாக்கும் பணியில் சட்டத்துறையின் தமிழ்ப்பிரிவும் ஆட்சிமொழி ஆணையமும் செயற்பட்டு வருகின்றன. ஆட்சிமொழிச் செயலாக்கத்தை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள் உள்ளனர்.

### அறிவியல் தமிழ்

நாளும் புதுமைதரும் அறிவியலைத் தமிழில் கொண்டுவரும் முயற்சியில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள அறிவியல் தமிழ்த்துறை பணியாற்றி வருகிறது.

### பயிற்றுமொழியாகத் தமிழ்

பல்வேறு துறைகளையும் சார்ந்த நூல்களைத் தமிழில் கொண்டுவருவதன் மூலம், பயிற்றுமொழியாகத் தமிழை வளர்த்தெடுக்க முடியும், இதற்கென்று பாடநூல் நிறுவனம் செயற்பட்டு வருகிறது. இவற்றுடன் தனியார் பலரும் தமிழ் வளர்ச்சிப் பணிகளிலும் மொழிபெயர்ப்புப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தமிழ்மொழியைத் தற்காலப் பயன்பாட்டு மொழியாக மேலும் வளர்த்தெடுக்கப் பின் வருவனவற்றைச் செயற்படுத்தலாம்.

## கலைச்சொல்லாக்கக் குழு

ஆட்சித் தமிழையும், அறிவியல் தமிழையும், பயிற்றுமொழித் தமிழையும் உருவாக்கிட கலைச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்திடல் உடனடித் தேவையாக இருக்கிறது.

ஒரே கலைச்சொல்லிற்குப் பலரும் பல்வேறு விதமான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துவதில் நேரிடும் குழப்பங்களையும் சிக்கல்களையும் தவிர்த்திடவும், கலைச் சொற்களைத் தரப்படுத்திடவும் கலைச் சொல்லாக்கக்குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும். இக்குழுவில் பல்வேறு துறைச்சார்ந்த பேராசிரியர்களும் அறிஞர்களும் இடம்பெற செய்யலாம்.

## சொல்வங்கி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முன்னர் செயற்பட்டு வந்த 'சொல்வங்கி' அமைப்பு போன்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். அவ்வப்போது மொழியாக்கம் தேவைப்படுவோர் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும், நல்ல சொல்லாக்கம் அறிந்தோர் தொடர்புகொண்டு தெரிவித்திடவும் ஏதுவாக "சொல்வங்கி' அமைக்கப்படலாம். இதில் ஆட்சிமொழி, அறிவியல் மொழி, பயிற்றுமொழி தொடர்புடையோர் மட்டுமன்றி அன்றாட மக்கள் தமிழில் செயற்பட வேண்டியுள்ள செய்தித் தொடர்புத்துறையினரையும் இடம்பெறச் செய்யலாம்.

## இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு

ஒரு மொழியின் வளம் என்பதே அதில் உள்ள இலக்கியங்கள் தாம். அவ்வகையில் தமிழ் தன்னிகரற்ற வகையில் இலக்கிய வளங்களைக் கொண்டுள்ளது. எனினும் உலகளவில் இக்கால இலக்கிய வளர்ச்சியையும் திறனாய்வுப் போக்கையும் இனம் கண்டுகொள்ளவும் அதற்கு இணையாகத் தற்காலத் தமிழிலக்கியம் படைக்கப்படவும் இலக்கிய மொழிபெயர்ப்பு அவசியமாகிறது.

எனவே, பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் மொழி பெயர்க்கப்படவும் தமிழிலக்கியங்கள் பிறமொழியில் பெயர்க்கப்படவும் இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு இன்றியமையாததாகும். ஆசியவியல் நிறுவனம், தமிழ்ப்பல்கலைக்கழகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களும் தனியார் பலரும் இம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு இடையில்

“

**ஒரு மொழியின் வளம் என்பதே அதில் உள்ள இலக்கியங்கள்தாம்! அவ்வகையில், தமிழ் தன்னிகரற்ற வகையில் இலக்கிய வளங்களைக் கொண்டுள்ளது. எனினும், உலகளவில் இக்கால இலக்கிய வளர்ச்சியையும் திறனாய்வுப் போக்கையும் இனம் கண்டு கொள்ளவும், அதற்கு இணை யாகத் தற்காலத் தமிழிலக்கியம் படைக்கப்படவும் இலக்கிய மொழிபெயர்ப்பு அவசியமாகிறது.**

”

ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் வகையில் இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு செயற்படலாம்.

## மொழிபெயர்ப்பு ஆணையம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட இலக்கிய வளங்களை உடைய மொழியாகவும் இன்றளவும் பேசப்பட்டு வரும் மொழியாகவும் விளங்கிவரும் உலகின் மிகத்தொன்மையான சில மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழை இன்றையத் தேவைக்கேற்ப வளர்த்தெடுத்திட மொழிபெயர்ப்பு மிகவும் தேவையாகிறது. வழக்கிறந்து போன ஈப்ரு மொழிக்கும் வடமொழிக்கும் புத்துயிர் அளிக்கும் முயற்சிகள் தொடரப்படுகின்றன. அவற்றில் வெற்றியும் பெற்று வருகின்றனர். எனவே இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கிய வளமையோடும் பேச்சு மொழியாகவும் விளங்கிவரும் தமிழ்மொழியை மொழிபெயர்ப்பின் வழி வளர்த்தெடுப்பது அரிய செயலாக இருக்காது.

ஆகவே மேற்குறிப்பிட்ட மொழிபெயர்ப்பின் வழியமைந்த பல்வேறு பணிகளையும் ஒருங்கிணைத்து மொழிபெயர்ப்பு ஆணையம் ஒன்று உருவாக்கப்படலாம். இதன்வழி உலகளாவிய அறிவியலையும், கலைகளையும் அவ்வப்போது தமிழில் உடனுக்குடன் கொண்டுவந்து அடுத்த நூற்றாண்டுக்கான தமிழை வளர்த் தெடுக்கலாம். ★



# கற்க கசடற

- ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப.,
இயக்குநர், சமூக நலத்துறை.

## ஆரம்ப கல்வியில் என்ன குறைபாடு?

பள்ளி செல்லும் வயதுடைய அனைத்துக் குழந்தைகளும் கண்டிப்பாக ஐந்தாவது வரை தொடர்ந்து படிக்கவேண்டும். அவர்கள் தரமான கல்வி பெற வேண்டும். ஐந்தாவது படித்து முடிக்கும் பொழுது தாய்மொழி, கணிதம், சூழ்நிலையியல் ஆகிய மூன்று பாடங்களில் 663 திறன்களைப்பெற்று இருக்க வேண்டும். கற்கவேண்டிய அனைத்தையும் கற்றுக் கொள்வதுதான் தரமான கல்வி, இன்றைய சூழ்நிலையில் இவை எதுவும் சரியாக நடை பெறுவதில்லை.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய பள்ளி செல்லும் வயதுள்ள அனைத்துக் குழந்தைகளும் முதல் வகுப்பில் பள்ளியில் சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். துறையின் புள்ளி விவரத்தின்படி 16 விழுக்காடு மாணவர்கள் ஐந்தாவது வரை படிக்காமல் இடையில் நின்றுவிடுகிறார்கள் என்று இருந்தாலும், ஒரு சில தன்னார்வ அமைப்புகள் எடுத்த கணக்கெடுப்புகளின்படி 40 விழுக்காடு மாணவர்கள் இடையில் நின்று விடுகிறார்கள் என்று அறியப்படுகிறது. தன்னார்வ அமைப்புகளின் கணிப்புத்தான் சரியாக இருக்கக்கூடும்.

அதே போல எத்துனை மாணவர்களுக்குத் தேவையான திறன்கள் அனைத்தும் சென்று அடைகிறது என்னும் கணக்கு-துறையில் இல்லாவிட்டாலும், ஒரு சில தன்னார்வ நிறுவனங்கள் எடுத்த கணக்கெடுப்பின்படி, இது 20 முதல் 30 விழுக்காடு ஆகும். இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் - ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஆயிரத்துத் தொள்ளாயிரம் கோடி ரூபாய்

ஆரம்பக்கல்விக்காகச் செலவு செய்து 30 விழுக்காடு பயன் மட்டுமே பெறுகிறோம். 70 விழுக்காடு வீணாகின்றது. இதை எப்படிப் பொறுத்துக்கொள்வது?

### வீணாகும் செல்வம்

நமது கிராமங்களில் ஏறக்குறைய 70 விழுக்காடு மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியே போய்ச் சேருவதில்லை. ஆரம்பக்கல்விதான் அடிப்படை. ஒரு சில மருத்துவப்பட்டதாரிகளும் பொறியியல் பட்டதாரிகளும் நமது நாட்டைவிட்டு, வேலை தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் பொழுது நமது நாட்டுச் செல்வம் வீணாகிறது (Brain Drain) என்று பெரிதாகக் கூறுகிறோம். ஆனால் நமது நாட்டில் உள்ள 70 விழுக்காடு குழந்தைகளின் திறன் எல்லாம் பள்ளிகளுக்கே செல்லாமல் வீணாவதை எப்படி அனுமதிப்பது?

**"நமது கிராமங்களில், ஏறக்குறைய 70 விழுக்காடு மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியே போய்ச் சேருவதில்லை!... அவர்களின் திறன் எல்லாம் பள்ளிகளுக்கே செல்லாமல் வீணாவதை எப்படி அனுமதிப்பது?"**

ஆரம்பக்கல்வி சரியாக அமையாததால் குழந்தைகள் பள்ளியில் படிக்காமல் எழுத்தறிவில்லாதவர்களாக வளர்கிறார்கள். இவர்கள் வளர்ந்து பெரியவர்களானவுடன் இவர்களைக் கல்லாதவர்கள் எனக் கண்டறிந்து, அறிவொளி இயக்கத்தின் மூலமும், முதியோர் கல்வியின் மூலமும் ஏராளமான பணச்செலவு செய்து கல்வி அறிவைப் புகட்ட முயல்கிறோம். ஆரம்பக்கல்வியைச் சரி செய்தோமேயானால் இந்நிலை வருமா?

### யார் காரணம்?

ஆரம்பக்கல்வியில் என்ன குறைபாடு? என்ன செய்ய வேண்டும்? ஏறக்குறைய அரசுத் தரப்பிலும், அரசு உதவி பெறும் வகையிலும் தமிழ்நாட்டில் 36,000 ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகள் உள்ளன.

1,80,000 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

ஒன்று முதல் ஐந்து வரை 65 இலட்சம் குழந்தைகள் படிக்கிறார்கள். நாள்தோறும் பள்ளிகள் நடக்கின்றன. ஆசிரியர்கள் பாடங்கள் போதிக்கின்றனர். ஆனால் பள்ளிகளில் நடக்கவேண்டிய கற்றல், கற்பித்தல் மட்டும் நடைபெறுவதில்லை. யார் காரணம்? எது காரணம்?

பெற்றோர்கள், அவர்கள் வறுமை, குழந்தைகள் வேலை செய்ய வேண்டிய கட்டாயம், பள்ளிகள் இல்லாமை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, பள்ளிகளில் தேவையான வசதி இன்மை போன்ற பல காரணங்கள் எடுத்துவைக்கப்படுகின்றன.

நமது பள்ளிகளில் கட்டணம் வசூலிக்கப் படுவதில்லை. மேலும் குழந்தைகளை ஈர்க்கும் மதிய உணவு, சீருடை, பாடப்புத்தகங்கள் போன்றவை வழங்கப்படுகின்றன. பெற்றோர்கள் குழந்தைகளைத் தவறாமல் முதல் வகுப்பில் சேர்த்துவிடுகின்றனர். தமிழ்நாட்டில் குழந்தைகளை முதல் வகுப்பில் சேர்க்கும் விகிதம் ஏறக்குறைய நூறு விழுக்காடாகும். மேலும் ஐந்தாவது படிக்கும் குழந்தை 11 வயதுக்கு உட்பட்டுதான் இருக்கும். இந்தச் சிறுவர்களால் குடும்பத்திற்குப் பெரிய வருமானம் ஈட்டித்தர இயலாது. ஆதலால் பெற்றோர்களின் வறுமையினால் அல்லது அறியாமையினால் அல்லது குழந்தைகள் தொழில் செய்யவேண்டிய கட்டாயத்தினால் ஆரம்பக்கல்வியை முழுமையாக வழங்க இயலவில்லை என்ற கூற்று ஏற்கக்கூடியது அல்ல!

பள்ளிகளில் முதல் வகுப்பில் சேரும் குழந்தைகள் தான் தொடர்ந்து படிப்பதில்லை. படித்தாலும் திறன்களைப்பெறுவது இல்லை. இதற்குப் பெற்றோரைக் குறைகூறுவது சரியாக இராது. ஐந்தாவது படித்து முடித்த குழந்தை தாய்மொழியில் சரியாக எழுதப்படிக்கக்கூட தெரியாத பொழுது சிறிய கூட்டல், கழித்தல் கணக்குகளைக் கூட போடமுடியாத பொழுது அத்தகைய கல்வியின் மீதும் கல்விச்சாலையின் மீதும் எங்ஙனம் சமுதாயத்திற்கும் பெற்றோருக்கும் நம்பிக்கை பிறக்கும்? ஆர்வத்துடன் பெற்றோர், குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கின்றனர். பள்ளிகள் கவர்ச்சிகரமாக இல்லாததால் குழந்தைகள் பள்ளியிலிருந்து வெளியே தள்ளப்படுகின்றனர். பள்ளிகளில் சேர்ப்பதில் காண்பித்த ஆர்வத்தைப் பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிகளில் தொடர்ந்து படிக்கவைப்பதில் காட்டுவதில்லை!

### களையப்பட வேண்டியது

ஆசிரியர் பற்றாக்குறை, பள்ளிகளில் வசதியின்மை போன்ற காரணங்களையும் ஏற்க இயலாது. ஏனென்றால் தேவையான ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளிலும், அனைத்து வசதிகள் உள்ள பள்ளிகளிலும் கல்வியின் தரம் மோசமாகத்தான் உள்ளது. இவற்றையெல்லாம் விட வேறு ஏதோ ஒன்று இடர்செய்கிறது. அதைக் கண்டறிந்து களையவேண்டும்.

குழந்தைகளுக்குக் கற்கும் திறன் பிறக்கும் இடத்தைப் பொறுத்து மாறுவதில்லை. சென்னையில் பிறந்தாலும், வேலூரில் பிறந்தாலும், இலண்டனில் பிறந்தாலும் கற்கும் திறன் ஒன்றுதான். கற்பிக்கும் முறையில்தான் வேறுபாடு உள்ளது. குழந்தைகள் சிறப்பாகக் கற்பதும் கற்காமலிருப்பதும் கற்பிக்கும் முறையில்தான் உள்ளது.

குழந்தைகளுக்குப் பிடிக்கும்படியாகப் பாடங்களை விளையாட்டாகவும், ஆடல், பாடலாகவும் சொல்லிக் கொடுப்போமேயானால் கண்டிப்பாக அந்தக் குழந்தைகள் நன்கு கற்றுக்கொள்ளும். நமது கல்விக் கொள்கையும் குழந்தைகளை மையமாக வைத்துச் செயல்பாட்டு முறையில் கல்வி கற்பிக்க வேண்டும் என்றுதான் வலியுறுத்துகிறது. ஆனால், இது நடைபெறுவதில்லை. ஏன்? நமது பள்ளிகளில் கற்பிக்கும் முறை மட்டுமே மாறுமேயானால் ஆரம்பக்கல்வியில் மிகப்பெரிய மறுமலர்ச்சியைக் காணலாம். இதற்குக் கூடுதல் செலவினம் கிடையாது. இதை ஏன் செய்யக்கூடாது?

மனம்தான் மாறவேண்டும்; மாறினால் குழந்தைகள் வாழ்வில் ஒளி பிறக்கும்! ★

# சுடுமண் சிலைகள்

- சா. கந்தசாமி

மனிதர்களின் ஆதி படைப்புகள் மண் உருவங்கள்தான். நதிக்கரையோரங்களில் தங்கி நிரந்தரமாக வாழ ஆரம்பித்த மனிதக்கூட்டம், மனத்தில் தோன்றிய கற்பனைகளுக்கு மண்ணை எடுத்துத் தண்ணீர் ஊற்றிப் பிசைந்து உருவங்கள் படைக்க ஆரம்பித்தார்கள். எளிய அவர்களின் படைப்புக்கள் கற்பனை என்பதோடு, அனுபவங்களையும் - பயன்படுத்திய ஆயுதங்களாகவும் - கண்ட காட்சிகளாகவும் இருந்தன.

ஆனால், ஈரமண்ணில் செய்து வெய்யிலில் உலர்த்திக் காய வைத்த படைப்புகள் வெகுகாலம் நிலைத்திருக்கவில்லை. மழை வெள்ளம் என்று தண்ணீரில் நனைத்தபோது கரைந்து அழிந்து போயின. ஆனால் கற்பனைத் திறன் கொண்ட மனித மனம் இடைவிடாது மறுபடியும் மறுபடியும் மண் உருவங்களைப் படைத்துக்கொண்டே இருந்தது.

நெருப்பு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தங்களின் அருமையான மண் படைப்புக்களைச் சுட்டெடுக்க ஆரம்பிததார்கள். இன்று மனித நாகரிக வளர்ச்சியைக் கணக்கிட்டுச் சொல்லக் காரணமாக இருக்கும் தடையங்களில் இம்மாதிரியான சுடுமண் படைப்புக்கள் அரிய பொக்கிஷங்களாக இருக்கின்றன. பண்டைய நாகரிக வாழ்க்கையின் உச்சமாக இருந்த மொகோஞ்சோதாரா-ஹரப்பாவில் எருது மாடு, ஏர், நாணயங்கள், கடவுள், தாய்க்கடவுள் எனப் பலதரப்பட்ட சுடுமண் உருவங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அது மட்டுமின்றி அரசு இலச்சினைகளும் அகழ்ந்து எடுத்திருக்கிறார்கள்.

கலைப்படைப்புக்கள் மட்டுமின்றி - வீடுகள், மாளிகைகள் கட்ட மண்ணால் கற்கள் செய்து சுட்டெடுத்து அந்நாளிலேயே நேர்த்தியான அமைப்புக்களோடு கட்டிடங்கள் கட்டி இருக்கிறார்கள்.

இம்மாதிரி மண்ணால் உருவங்கள் செய்து தீயில் சுட்டு எடுப்பதை 'டெரகோட்டா' என்கிறார்கள். 'டெர' என்றால்



மண், 'கோட்டா' என்றால் சுட்டது என்று பொருள். இரண்டும் சேர்ந்து 'டெர கோட்டா' என்று ஆகியது. இந்த 'டெரகோட்டா' என்ற சொல், களிடையே ஒரு பழக்கமாக இருந்து வந்தது சமூக சரித்திர வரலாறு நூல்களில் இருந்து தெரிகிறது.

> தமிழ்நாட்டில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலமாகக் கிடைத்த சுடுமண் உருவங்கள், மண்பாண்டங்கள், தாழிகள், பாலிகைகள், குடங்கள் - தமிழ்மக்கள் சுடுமண் உருவங்கள் செய்வதிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் அடைந்திருந்த முன்னேற்றத்தைக் காட்டுவதாக இருக்கிறது!

காலம் செல்லச் செல்ல பரந்துபட்ட அளவில் பொருள் பெற்றது. இயற்கையாகப் பல இடங்களில் காணப்பட்ட மண்ணின் காவி வண்ணத்தை 'டெரகோட்டா' வண்ணம் என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

'டெரகோட்டா' என்பது சுட்டமண் உருவங்களைச் சுட்டிக்காட்டுவதோடு, செங்கல், காலிவர்ணம் ஆகியவற்றோடு சேர்ந்து போயிற்று.

தமிழ்மக்கள் வெகு கால மாகவே 'டெரகோட்டா' கலையை நன்கு அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சங்க இலக்கியத்தில் நிறைய சான்றுகள் உள்ளன. மண் பாண்டங்கள் செய்த கலை ஞர்கள், வேட்கோ, கலஞ் செய்கோ என்றும் அழைக் கப்பட்டார்கள். அக்காலத்தில் தமிழ் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மண்பாண்டங்கள் இடம் பெற்றன.

இறந்து போனவர்களைப் பெரிய மண் தாழிகளில் வைத்து பூமியில் புதைத்தது, தமிழர் தங்கக் காசுகளைத் தமிழ் மக்கள் மண் குடங்களில் போட்டுவைத்து இருந்தது பற்றி ஒரு மேல்நாட்டு அறிஞரும் எழுதி இருக்கிறார்.

தமிழ் நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தலின் போது, வாக்குப் பெட்டிகளாக மண்பாண்டம் பயன் பட்டதால், குடவோலை என்றே வாக்குச்சீட்டு அழைக்கப் பட்டதும், சரித்திரத்தின் வாயி லாக தெரிகிறது.

டெரகோட்டா என்று அழைக் கப்படும் சுடுமண் உருவங்கள் வடிவமைப்பதில் மகத்தான மாறுதல், ஏசுநாதர் பிறப்பதற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய தரைக் கடல் பகுதியில் ஏற்பட்டது எனச் சரித்திர ஆசிரியர்கள் சொல் கிறார்கள்.

அதாவது, சக்கரம் 'டெர கோட்டா' செய்வதில் ஓர் அங்கமாக இணைந்தது. சக்க ரத்தைச் சுற்றி 'டெரகோட்டா' செய்ய ஆரம்பித்த காலத்தில் தான், வடிவமைப்பில் நேர்த்தியும், ஒரே அளவு கன பரிமாணமும் கிடைக்க ஆரம்பித்தது. மத்திய தரைக்கடல் பகுதியில் ஏற்பட்ட - கலையில் தொழில் நுட்பம் மெல்லமெல்ல ஒவ்வொரு நாடாகப்பரவி, இன்றுவரையில் தன் இருப்பைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி போன்ற கலை வல்லுநர்கள் சுடுமண் சிலைகள், உருவங்களின் முக்கியத்துவம் பற்றி அதன் வழியாகச் சரித்திரத்தை அறிந்து கொள்ள முடியும் என்று எழுதி நிலை நிறுத்தியது, மேலும் மேலும் சரித்திர ஆராய்ச்சி யாளர்களை இத்துறையில் ஈடுபாடு கொள்ள வைத்தது. தமிழ்நாட்டில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலமாகக் கிடைத்த சுடுமண் உருவங்கள், மண்பாண்டங்கள், தாழிகள், பாலிகைகள், குடங்கள், தமிழ் மக்கள் சுடுமண் உருவங்கள் செய்வதிலும் அவற்றைப் பயன் படுத்துவதிலும் அடைந்திருந்த முன்னேற்றத்தைக் காட்டுவதாக இருக்கிறது.

மாமன்னன் ராஜராஜ சோழன் பட்டத்தரசி கோயில்களுக்கு மண்பாண்டங்கள் செய்து கொடுக்கும் வேட்கோக்களுக்கு மானியம் அளித்திருந்தது பற்றி ஒரு கல்வெட்டு மூலமாக அறியமுடிகிறது. ஆனால் காலம் செல்லச்செல்ல வேறுவேறு உலோகங்கள் உபயோகத்திற்கு வந்தபோது, மண்பாண்டங்கள் ஓரளவு மதிப்பு இழக்க ஆரம்பித்தன. வெள்ளி, செம்பு போன்ற தாதுக்களில் செய்யப் பட்ட பாத்திரங்கள் மதிப்பும் அங்கீகாரமும் பெற்றன.

இக் காலகட்டத்தில் சமூக ஆய்வாளர்களாகவும், சரித்திர ஆசிரியர்களாகவும் செயல்பட்ட இ.பி.ஹேவல் போன்றவர்கள் சென்னை, ராஜதானி முழுவதும் பயணமேற்கொண்டு, அரிய மட்பாண்டங்களைத் தேடிக்

கண்டுபிடித்து காட்சிக்குக் கொண்டு வந்தார்கள். எட்கர் தர்ட்ஸன், பேர்ட்வுட் போன்ற சமூக எழுத்தாளர்கள் அவைபற்றி விளக்கமாகக் குறிப்புக்கள் எழுதினார்கள்.

இந்தியாவில் 'டெரகோட்டா' ஒரு கலையாக வங்காளம், குஜராத்-போன்ற பகுதிகளில் இருந்தாலும், உச்சமாக இருப்பது வங்காளத்திலும் தமிழ்நாட்டிலுந்தான். வங்காளத்தில் 'டெரகோட்டா' கோயிலை நிர்மாணித்து இருக்கிறார்கள். பதினாறு பதினேழாவது நூற்றாண்டில் கட்டப்பட்ட டெரகோட்டா கோயில் இன்றும் பொலிவோடு இருந்து வருகிறது.

தமிழ்நாட்டு டெரகோட்டா - சுடுமண் சிலைகள் தனித் தன்மையும் வனப்பும் கொண்டவைகளாக இருக்கின்றன. காவல் தெய்வம் என்று அழைக்கப்படும் ஐயனார் கோயிலில் அவை இருந்தாலும், மரபு ரீதியில் அவை கோயில்களே இல்லை. சூரியனில் காய்ந்தும் - மழையில் நனைந்து கொண்டும் இருந்தாலும், அவை திறந்த வெளியில் இருந்து மக்களைக் காக்கின்றன.

இந்தக் காவல் தெய்வத்தோடு இணைத்து சொல்லப்படுவது சுவாரசியமானது. மன்னன் தனது சட்ட ஆட்சியைச் செலுத்தி மக்களுக்கு நீதிவழங்கி, பாதுகாப்பைக் கொடுக்கும்போது, இரவில் கெட்ட ஆவிகளிடம் இருந்து மக்களைப் பாதுகாப்பது ஐயனார் என்பதுதான் தத்துவம். அதன் காரணமாகவே ஐயனார் ஏரிக்கரை, குளக்கரை, ஆற்றங்கரை என்று ஊரின் கரையில் இருந்து உயிர்களைக் காக்கிறார். இரவில் குதிரைமீது ஏறி சலங்கையொலிக்க வேட்டை நாய் பின்தொடர பவனிவந்து மக்களைக்காக்கிறார் என்பது ஐதீகம்.

மூடாத இமைகளும், கரத்தில் பிடித்த நீண்டவாளுமாக ஐயனார் சில இடங்களில் அமர்ந்து இருக்கிறார். ஒவ்வொரு ஊரிலும் ஐயனார் ஊரின் நிலைகளுக்கு ஏற்ப மாறுவதும் உண்டு.

ஐயனாருக்கு ஐதீகப்பின்னணி இருப்பது போலவே சரித்திரப் பின்னணியும் உண்டு. ஓர் ஊரில் உச்சமெனச் சொல்லத்தக்க பல சுடுமண் சிலைகளைப் பார்க்க முடிகிறது. ஆவுடையார் கோயில் பகுதியில் - மாணிக்கவாசகர் கோயில் கட்டிய ஊரில்-கோயில் மண்டபமே குதிரைசுவாமி மண்டபமாக இருப்பதால் அந்தப் பகுதியில் 'டெர கோட்டாவில்' குதிரை என்பது பிரதான அம்சமாகிறது. நமன சமுத்திரத்தில் சின்னஞ்சிறிய குதிரைகள் சிறப்பு அம்சமென்றால் ராஜேந்திர சோழன் காலத்தில் ஆள் உயரத்திற்கு மேலான குதிரை அதிசயப்பட வைக்கிறது.

> **போருக்குச் சென்று, வீர மரணமடைந்தவர்களின் நினைவைப் போற்றும் விதமாகவும். ஊருக்குள் புலி, கரடி போன்ற விலங்குகள் புகுந்தபோது அவற்றைக் கொன்று மக்களைக் காக்கும்போது உயிர்நீத்தவர்களின் வீரத்தைப் போற்றும் விதத்தில் வைத்த சுடுமண் சிலைகளை வெளியூரில் இருந்து வந்தவர்கள் 'ஐயன் யார்?' என்று வினவியதால் 'ஐயனார்' என்று மருவிவிட்டது!.**


இருந்து போருக்குச் சென்று, வீரமரண மடைந்தவர்களின் நினைவைப் போற்றும் விதமாகவும் - ஊருக்குள் புலி, கரடி போன்ற விலங்குகள் புகுந்தபோது அவற்றைக்கொன்று மக்களைக் காக்கும்போது உயிர் நீத்தவர்களின் வீரத்தைப் போற்றும் விதமாக வைத்த சுடுமண் சிலைகளை, வெளியூரில் இருந்து வந்தவர்கள், ஐயன் யார் என்று வினவியதால் ஐயனார் என்று மருவிவிட்டது என்று சரித்திரம் சொல்கிறது.

சரித்திரமானாலும் - ஐதீகமானாலும் தமிழகத்து சுடுமண் சிலைகள் கலையின் சிறப்பு அம்சமாக இருக்கின்றன. பண்பாடு நாகரீகம் என்பதின் தொடர்ச்சியாக, மரபின் இழை யறாமல் இருந்து வருகின்றன.

புதுக்கோட்டை, தர்மபுரி, தஞ்சாவூர், சேலம், மதுரை ஆகிய பகுதிகளில் 'டெரகோட்டா'வின்

வாழ்க்கையில் இருந்து கலையைப் பிரித்தெடுக்க முடியாது என்பதால் - விஞ்ஞானம் மிகமிக, மனித மனம் என்பது புராதானக் கலைகளில் இன்றும் ஈடுபாடு கொள்கிறது. எனவே மனிதர்களின் ஆதி கலை வெளிப்பாடான 'டெரகோட்டா' என்று சொல்லப்படும் சுடுமண் சிலைகள் எல்லாதரப்பட்ட மக்களையும் வசீகரித்து வாழ்க்கையின் ஓர் அங்கமாக இடம்பெற்று வருகிறது.

களச்சாவு கண்டவர்களின் சுடுமண் சிலைகளைப் பார்த்து, 'ஐயன் யார்?'' என்றெழுந்த வினாவுக்கான விடையே நாளாவட்டத்தில் 'ஐயனார்' ஆகியது என்கிறது வரலாறு! ★



கவிஞர் எழில்வேந்தன்

இயற்கை எழுதிய தண்ணீர்க் கவிதை -
மண்ணின் மனக்குரலின் திரவப் பதிவு -
புவிக்கோளத்தின் புதுமை.
யுகங்களைக் கடந்து நிற்கும்
அகிலத்தின் ஆயுள் ரேகை!

உயிர்களைப் பிரசவிக்க
மண்மங்கை கருவுற்றபோது
உயிரணுக்களுக்காக ஊறிவந்த தாய்ப்பால்!

நாகரிகத்தின் நாற்றங்கால்
வெளியில் மிதக்கும்
வெளிச்சப் புதையல்!

எழுந்திடத் துடிக்கும் அலைகள் -
குளிர் ஜுவாலைகள்!

நான்
பிரபஞ்ச மொழியில்
பேசியதெல்லாம் புரியாமல் போனதால்
உள்ளூர் மொழியில் உரைத்திட வந்தேன்!

ஜீவநாடியாய்ச் செல்லத்துடித்து
காட்டாறாகக் காலம் கழித்திருந்தேன்.
கரைகளை என் காவலுக்கு அனுப்பினீர்கள்-
கௌரவம் வந்ததாய் கர்வப்பட்டாமல்...
என்னை அங்கங்கே அணைச்சிறைக்குள்ளே
அடைத்து வைக்கிறீர்கள்!

என்
பார்வை முழுக்க
பள்ளங்களையே பார்த்திருக்கிறபோது
மேடுகளைக்கண்டு மிரண்டுபோகிறேன்...
அருவியாய்ப் பாய்ந்து அங்கங்கே குதிக்கிறேன்!

வீரிய விளைச்சல்களுக்கே
விருப்பப்படுகிற என்னை
விழலுக்கு விரயமாக்காதீர்கள்!

வந்து செல்கிற வழிகள் தோறும்
பச்சைக் கம்பளப் பாய் விரிக்கின்றேன்!

உங்கள் கால்களைத் தழுவ
பூக்களைப் பரிசாகச் சுமந்து வருகிறேன்.
நீங்களோ...
முட்களையே முகத்தில் வீசியெறிகின்றீர்கள்!

உங்கள்
அழுக்குகளை அகற்றிட வந்த என்னை
அசிங்கங்களால் அழுக்காக்கி விட்டீர்கள்!
சமுத்திர சங்கமம் என்னும் சங்கற்பத்தில்
சமரசங்களுக்குச் சம்மதிப்பதில்லை.
இலட்சியங்களை அடகுவைத்துவிட்டு
அடக்குமுறைகளுக்கு அடிபணிவதில்லை.
தாமதமாகலாம்...ஆனால் தவிர்க்கமுடியாது!

என்
உடன்பிறப்புகளின் சந்திப்புகளில்...
பாதையில் நேர்ந்த துயரங்களைச் சொல்லி
தேம்பியழுவதால்தான்...
கடல்நீர் கண்ணீரால் கரித்து
உப்பு நீராய் உவர்த்துப்போனது!

எங்களைச்
சூரிய நெருப்பு சுட்டெரிக்கிறது-
மேகச் சிறகுகளைக் கட்டிக்கொண்டு
மேலே பறந்து
மழைத்துளியாக மறுபடி உயிர்க்கிறோம்!

என் கோபத்தைக் காட்டிட
அவ்வப்போது குமுறியிருக்கிறேன்.
நீங்களோ
நியாயங்களைத் தள்ளுபடி செய்தீர்கள்!
தரையோடு தரையாய்
தவழ்ந்துவந்து கேட்கும்
இந்தத்
தண்ணீரின் கோரிக்கைகள்
நிராகரிக்கப்படுமென்றால்...
நாளை...நான்
நெருப்பாகக் கொழுந்துவிட்டு
நிமிரவேண்டியிருக்கும்!

**TNPSC**

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## தமிழ்ப்புலமைத்தேர்வு - செப்டம்பர் '97

விளம்பர எண் 12/97

1997-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் **18-ம்** தேதியன்று ஆறு ஆண்டுகள் பணிநிறைவு பெறாமலும், பள்ளி இறுதி வகுப்பிலோ, பட்டப்படிப்பிலோ தமிழை ஒரு பாடமாக எடுக்காமலும் அல்லது தமிழில் எந்தத் தேர்விலும் தேர்ச்சி பெறாமலும் உள்ள தமிழ்நாடு பிரிவைச் சார்ந்த, தாய்மொழி தமிழ் அல்லாத அகில இந்தியப்பணிகள் **(ஐ.ஏ. எஸ்., ஐ.ப்பி.எஸ்., மற்றும் ஐ.எப்.எஸ்.,)** அலுவலர்களுக்கான தமிழ்ப்புலமைத் தேர்வு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், அதன் அலுவலகத்தில் 1997-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **18** மற்றும் **19**-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் **ரூ. 1,000/-** ரொக்கப் பரிசாகப் பெறத் தகுதி பெற்றவர்களாவார்கள். இத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசி தேதி **20.8.97** மாலை **5.45.** ஐ.ஏ.எஸ்., ஐ.ப்பி.எஸ்., மற்றும் ஐ.எப்.எஸ்., அலுவலர் அல்லாதவர்கள் இத்தேர்வு எழுதத் தகுதியற்றவர்கள் ஆவர். விண்ணப்பப்படிவம் **தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002** அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துப் பெறலாம்.

DIPR/1354/CNI/97

---

**TNPSC**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

விளம்பர எண். 11/97.

**அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் - செப்டம்பர் 1997.**

அகில இந்தியப் பணிகள் (ஐ.ஏ.எஸ்., ஐ.ப்பி.எஸ்., ஐ.எப்.எஸ்.,) மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப் பிரிவு அலுவலர்களுக்காக [Certain Classes of Officers] அரையாண்டு மற்றும் மொழித்தேர்வுகள் இவ்வாணையத்தால் 18.9.97 முதல் நடத்தப்படும். இத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 20.8.97. கடைசித் தேதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். தபால் துறையின் தாமதம் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ள ஒரு காரணமாகக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரங்களையும், தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2, அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்புகள் : 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத்தேர்வுகள் உரியதாகும்.

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ்மொழி உயர்நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்தியப் பணிகளில் பணிபுரியும் அலுவலருக்கான ரூ. 1,000/- ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான "தமிழ்ப் புலமைத் தேர்வும்" ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் அவர்களது விண்ணப்பம் 20.8.97-க்குள் தேர்வாணையத்திற்கு வந்து சேரும்படி தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமை செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலர், சென்னை-9, அவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

DIPR/1347/CNI/97

**FOR FUN FILLED HOLIDAYS STAY AT**

# Sterling Resorts

✧✧✧✧✧
✧✧✧✧
✧✧✧
✧✧
✧

**FERN HILL**
P.B. No. 73
KUDAH HOUSE ROAD
FERNHI HILL
OOTY - 643 004

✧
✧✧
✧✧✧
✧✧✧✧
✧✧✧✧✧

**ELKHILL**
P.B.No. 25
RAMAKRISHNA MUTT ROAD
ELK HILL
OOTY - 643 001

# உள்ளாட்சி அமைப்புகளுக்கு

# தமிழக அரசு வழங்கியுள்ள அதிகாரங்கள்!


மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நாட்டில் நீண்ட நெடுங்காலமாக நடத்தப் படாமலிருந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்தி ஜனநாயகத்திற்குப் புத்துணர்வு ஊட்டினார். மேலும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நாட்டு மக்களுக்கான நலப்பணிகளை விரைந்து நிறைவேற்றிடத் தமிழ்நாடு அரசின் சார்பாக ஏராளமான அதிகாரங்களை வழங்கியுள்ளார். மேலும், தேவையான அதிகாரங்களை வழங்கிடப் பரிசீலித்து வருகிறார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றிய விவரம் வருமாறு:

**ஊராட்சிகள்**

★ இதுவரை ஊராட்சிகளுக்கான மான்யம் மற்றும் அரசு உதவித்தொகை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அளிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சிக்கும் சேரவேண்டிய தொகை அரசு அளவிலேயே கணக்கிட்டு, அதனை நேரடியாக ஊராட்சி மன்றக் கணக்கில் செலுத்தும் புதிய முறை உருவாக்கப் பட்டுள்ளது. மக்கள் தேவைகளை அவர்களாகவே பூர்த்தி செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

★ ஊராட்சிகளின் தலைவர்கள் ஊராட்சியின் செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டு,



> மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது !

செயல் அலுவலர்களுக்கான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ ஊராட்சி சாலைகள் போன்ற பணிகளை மன்றத் தீர்மானத்துடன் எடுத்து நிறைவேற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ தெருவிளக்கு, குடிநீர்த் திட்டம் ஆகியவற்றைப் பழுது பார்க்கவும், பராமரிக்கவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ ஊராட்சி உதவியாளர்கள் இல்லாத இடங்களில், பகுதிநேர எழுத்தர்களை நியமித்துக்கொள்ளும் அதிகாரம் ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் ஊராட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள்.

★ மனைகளில் வீடு கட்டும் அனுமதி வழங்கும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு அதற்கான விதிமுறைகள் வகுக்கப் படுகின்றன.

★ மைய அரசு உதவியுடன் செயல் படுத்தப்படும் திட்டங்களான ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவுக்குடியிருப்புத்திட்டம், மத்திய ஊரகச் சுகாதாரத்திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம் போன்ற திட்டங்களுக்குப் பயனாளிகளைத் தேர்வு செய்யும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ புதிய படிப்பகங்கள் திறப்பதற்கான அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

★ ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஜவகர்வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.80,000 வரையிலும் பத்தாவது நிதிக்குழு அளிக்கும் நிதியிலிருந்து ரூ.30,000 வரை வழங்கப்படுகிறது. இது அந்த ஊரின் மக்கள் தொகை அடிப்படையில் மாறுபடக் கூடும்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

❑ ஏற்கெனவே உள்ள பொறுப்புகள்-ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு, நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கண்மாய்கள் பராமரிப்பு, அரசு திட்டங்களைச் செயலாக்குதல் (கண் ஒளி திட்டம், குடும்ப நலத்திட்டம், சத்துணவுத்திட்டம், ஆதி திராவிடர்கள் நலத்திட்டம் ஆகியவை) போன்ற பொறுப்புகள் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்குமாறு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

❑ வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயலாக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சுமார் ரூ.70 இலட்சம் அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

❑ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயலாற்றும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ.30 இலட்சம் வரை நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு மக்கள்தொகை அடிப்படையில் மாறுபடக் கூடும்.

# உள்ளாட்சி அமைப்புகளுக்குத்
# தமிழக அரசு வழங்கிவரும் நிதி !

- ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பத்தாவது நிதிக்குழு அளிக்கும் நிதியின் கீழ் ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

- வறட்சி நிவாரணப்பணிகள், குடிநீர் வசதி ஆகிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயலாக்கும் அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

- நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் தேர்ந் தெடுக்கப்படும் ஊராட்சி ஒன்றியத் தொடர்பான பணிகளைச் செயலாக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்களை ஊராட்சி ஒன்றியங்களே பராமரித்துக் கொள்ள அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 114(2)-ன் படி, ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசாணை எண்.886, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 29.10.1990-இல் கொடுக்கப்பட்டுள்ள திட்ட ஆய்வுப்பணிகள் தற்போதைய சூழ்நிலையில் இத்துறைகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கேற்ப தக்க திருத்தங்களுடன் திரும்ப ஒப்படை செய்யப்பட்டுள்ளது. பொது சுகாதாரம், ஆரம்பக்கல்வி, குடிநீர், சாலைகள், சிறுபாலங்கள் மற்றுமுண்டான போக்கு வரத்துத்தொடர்பு, கதர், கிராம மற்றும் குடிசைத்தொழில்கள், தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வேலைக்கல்வி, நூலகங்கள், ஊரக மின்மயமாக்கல் மற்றும் மரபு சாரா எரிசக்தி வளங்கள் ஆகிய பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட ஊராட்சிகள்**

- மாவட்ட ஊராட்சிகள் வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, தொழில்துறை, நீர்ப்பாசனத்துறை, மின்சாரத்துறை, கூட்டுறவுத்துறை, சமூக நலத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, கல்வித் துறை, சத்துணவு, ஆதிதிராவிடர் நலத்துறை ஆகிய துறைகளைக் கலந்து ஆலோசித்து திட்டப்பணிகளின் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள் அந்தந்தத் துறைகளுக்குத் தெரிவிக்கும் அதிகாரம் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகப்பணிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 20 சதவீதப் பணிகளைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்றும் பொறுப்பு வழங்கப் பட்டுள்ளது.

- பத்தாவது நிதிக் குழு ஒதுக்கீடு செய்யும் தொகையில் வளர்ச்சிப் பணிகளைத் தேர்ந்தெடுத்து வெவ்வேறு துறைகளின் மூலம் செயலாக்கும் அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

- ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் 1 கோடி ரூபாயும், பத்தாவது நிதிக் குழு வழங்கிய தொகையிலிருந்து ரூ.50 இலட்சமும் வழங்கப்படுகிறது.

**உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழக அரசு வழங்கி வரும் நிதி பற்றிய விவரம்:**

ஊராட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்க இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன்பொருட்டு ஊராட்சிகளின்

நிதிநிலையை ஆராய்ந்து நிதி நிலைமையினை, நிதி ஆதாரங்களை மேம்படுத்தவும், மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து மானியம் அளிப்பதற்கான கொள்கையை வகுத்தல், மாநிலத்திற்கும் ஊராட்சிகளுக்கும் இடையே அரசினால் விதிக்கப்படும் வரிகள், சுங்கக் கட்டணங்கள் முதலியவற்றில் கிடைக்கும் நிகர வருமானத்தைப் பிரித்தல் மற்றும் அந்த வருமானத்தை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான கொள்கைகளை வகுக்கவும், ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்ய வேண்டிய வரிகள், சுங்கக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யவும் அமைக்கப்பட்ட மாநில நிதிக் குழுவின் **(State Finance Commission)** பரிந்துரைகள் பெறப்பட்டு, பரிசீலனைக்குப்பின் பரிந்துரைகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, உடனடி செயல்பாடாக ஊராட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி கேளிக்கை வரியைத் தவிர, இதர மாநில அனைத்து வரிகளும் தொகுக்கப்பட்டு அதில் 8 சதவீத அளவுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1997 -98ஆம் ஆண்டிற்குப் பகிர்ந்தளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகை மொத்தம் ரூ.662 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 8 சதவீத மானியத்தில் 15 சதவீதம் அளவுக்குச் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 60:40 எனும் விகிதத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 85 சதவீதம் ஊரக மற்றும் நகர அமைப்புகளுக்கு 55:45 என்ற விகிதத்தில் ஒதுக்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய ரூ.309.485 கோடியை, 10:45:45 என்ற விகிதத்தில் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு இடையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997- 98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு இந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை முறையே ரூ.139.27 கோடியாகும்.

இவை தவிர, பத்தாவது நிதிக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மானியத் தொகையான ரூ.71.83 கோடியில் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.28 கோடியும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.38.40 கோடியும் - 10,000 மற்றும் அதற்கு மேல் மக்கட்தொகை கொண்ட ஊராட்சிகளுக்கு ரூ.5.43 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய அமைப்புகளான மாவட்ட ஊராட்சிகளுக்கு அலுவலகம் மற்றும் தொடக்க மூலதனச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தலவரி, தலவரி மீதான மேல் வரி மற்றும் முத்திரைத்தாள் தீர்வையின் மீதான மேல்வரி ஆகியவற்றை முழுமையாக அளிக்கிறது. மேலும், கேளிக்கை வரியில் முன்பு 70 சதவிகிதம் என்று இருந்ததை 90 சதவிகிதமாக அதிகரித்து வழங்குகிறது. மேலும் மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று மாநில வரியிலிருந்து கிடைக்கும் மொத்த வரி வருவாயில் 8 சதவிகிதம் வழங்குகிறது.

இதுமட்டுமின்றி மூலதன செலவிற்காக மத்திய நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாநில அரசு பெறும் 100 கோடி ரூபாயும், மேலும் முதலீட்டுச் செலவினங்களுக்காகத் தமிழக அரசின் சார்பில் 271.55 கோடி ரூபாயும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த ஆண்டு வழங்கப்படுகிறது.

ஆக, கடந்த ஆண்டு
<u>உள்ளாட்சிக்கு வழங்கியது</u> - **ரூ. 646 கோடி**

<u>இந்த ஆண்டு வழங்கியது</u> - **ரூ. 1545 கோடி**

அதுமட்டுமின்றி, ஆரம்பப் பள்ளியாசிரியர்கள் சம்பளம், ஆரம்ப சுகாதாரப்பணிகள் ஆகியவற்றிற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மாநில அரசு செலவழிப்பது ரூ.1677 கோடி, எனவே, மொத்தமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3222.55 கோடி செலவழிக்கப் படுகிறது. மத்திய அரசு தற்போது வரியைப் பகிர்ந்தளிக்கும் முறைக்குப் பதிலாக மத்திய அரசின் அனைத்து வரிகளிலிருந்தும் பெறப்படும் வருவாயில் 29 சதவிகிதம் என்ற முறையினால் ஏற்கெனவே இந்த ஆண்டிற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிற 2,485 கோடி ரூபாயை விட, கூடுதலாக சுமார் 200 கோடி ரூபாய் மாத்திரமே கிடைக்கும். ஆனால் இப்போதே தமிழக அரசு செலவழிப்பது ரூபாய் 3222.55 கோடியாகும். ★

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
# வேலூர் மாவட்டம்
# வறுமை ஒழிப்பு மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டங்கள் 1996-97

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வேலைகளின் எண்ணிக்கை | முடிக்கப் பட்டவை | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1-7-96இல் நிலுவைப்பணிகள் | 3535 | 3374 | |
| 2. | ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள் | 2019 | 1154 | 979.68 |
| 3. | தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தல் | 4246 | 927 | 1150.50 |
| 4. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | 6267 | 4531 | 213.00 |
| 5. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் | 679 | 679 | 29.92 |
| 6. | மகளிர் குழந்தைகள் மேம்பாடு திட்டம்-குழுக்கள் அமைத்தல் | 146 குழுக்கள் | 146 குழுக்கள் | 36.79 |
| 7. | கரிமவாயு கலன் அமைக்கும் திட்டம் | 200 கலன்கள் | 202 கலன்கள் | |

**பிரதீப் யாதவ், இ.ஆ.ப.,**
கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
வேலூர் மாவட்டம்

**ப.வி.ச. டேவிதார், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்
வேலூர்-9.

STD :04112
20019
22933
24233
Fax : 91-04112 24311

# A.G.K. SILKS

***For Upto Date Most High Class Fashionable Silk Sarees, Kanchi Cotton Sarees Manufacturers and Dealer's***

45-B, Sheikpet Nadu Street,

**KANCHIPURAM - 631 501.**

*Partners:*

**A.G.KRISHNA SAH**

**A.G.KANDASAMY SAH**

**A.G.PURUSHOTHAMAN SAH**

**K.JAWAHAR SAH**

# குதிரைச் சவாரி

## ஜெயசிம்ஹன்

கடலைப் பார்த்தபடியே மணற் பரப்பில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் நான். அலைகள் ஆரவாரத்துடன் கரையை நோக்கி வருவதையும், பிறகு கரையால் விரட்டப்பட்டு பின்வாங்குவது போலப் போவதையும் எவ்வளவு நேரம் பார்த்தாலும் எனக்குச் சலிக்கவேயில்லை.

நேற்று வரை காலைப் பொழுதுகளில் இது போன்ற சல்லிக்காசு பெறாமல் கடலைப் பார்த்து உட்கார்ந்துகொண்டிருந்தவன் இல்லை நான். விலை மதிப்புள்ள ஒரு காரின் பொறுப்புமிக்க டிரைவராக இருந்தேன். என் முதலாளிக்கும் அவர் குடும்பத்துக்கும் காலை முதல் இரவு

> ‘அந்தக் கல்லூரியிலிருந்து இதைத்தான் கற்றுக்கொண்டோம் என்று மறைமுகமாக அறிவிப்பதுபோல் அவர்களின் செய்கைகள் இருந்தன!’

வரை பயணம் செய்ய என் பணி தேவைப்பட்டது. அதெல்லாம் இப்போது முடிந்து விட்டது. நேற்று வேலை மாற்றம் பெற்று குடும்பத்தோடு எங்கோ இமயமலை அடிவாரத்தில் இருக்கும் ஒரு மாநிலத்துக்குச் சென்றுவிட்டார் அவர்.

கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து அவர்கள் வீட்டில் வேலை செய்ததைப் போல, என் பத்து வருட டிரைவர் அனுபவத்தில் இனிமையாக எங்கும் வேலை செய்ததில்லை. முப்பது வயதாகும் எனக்கு கார் ஓட்டுவதைத் தவிர வேறு வேலை எதுவும் தெரியாது.

கடற்கரை வெயில் சுள்ளென்று இருந்தது. எனக்குப் பின்னால் தூரத்தில் இருவர் நடந்து வருவது தெரிந்தது. உற்றுப்பார்த்தேன். வினோதமான கிராப்பும், பாவாடை போன்ற பேண்டும் அணிந்திருந்தான் ஒருவன். அவன் கையில் ஒரு நோட்டுப்புத்தகம், அவனை உரசியபடி ஒடிசலாய், குள்ளமாய் தோளில் ஒரு டம்பப் பையுடன் ஒருத்தி. இருவருக்கும் ஏறக்குறைய இருபது வயது தான் இருக்கும்.

சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் கரையில் நின்றிருந்த படகின் கீழே அமர்ந்தனர். அவன் சட்டென்று அவள் மடியில் தலைவைத்துப் படுத்தான். அவள் தன் கழுத்தைச் சுற்றியிருந்த சுரிதார் துணியை எடுத்து வெயில் படாதவாறு தன் தலை மேல் போர்த்திக் கொண்டாள், அப்படியே நீளமான அந்தச் சுடிதார் துணியை தன் மடிவரை இழுத்து அவன் முகத்திலும் வெயில் படாமல் லாவகமாக ஒரு கையால் பிடித்துக்கொண்டாள்.

ஏனோ எனக்கு அவர்களைப் பார்க்கும் போது அருவறுப்பும், கோபமும் வந்தது. அவர்களுக்குப் பின்னே தூரத்தில் தெரிந்த





மிகப்பெரிய கல்லூரியைப் பார்த்தேன். அந்தக் கல்லூரி யிலிருந்து இதைத்தான் கற்றுக் கொண்டோம் என மறைமுகமாக அறிவிப்பது போல் அவர்களின் செய்கைகள் இருந்தது.

'ம்...நான் மட்டும் கொஞ்சமாவது படித்திருந்தேன் என்றால், இதோ என் பின்னால் தெரியும் தலைவர்களின் சிலையைப் போல் எனக்கும்கூட ஒரு சிலை வைக்கும் அளவுக்குத் தகுதி பெற்றிருக்கலாம்' - என நினைத்தேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்று நான் சொன்னால் யாரும் இப்போது நம்புவதுகூட இல்லை. ஏதோ அவர்களிடம் விளை யாடுகிறேன் என நினைக்கிறார்கள். சே...எல்லாம் விதி! என என்னை நானே நொந்துகொண்டேன்.

கரையில் நின்றிருந்த படகின் கீழே தஞ்சம் புகுந்திருந்த அந்த வினோத கிராப்புத் தலையனையும், இரத்த சோகை உள்ளவள்போல் மெலிந்திருந்த அந்தப் பெண் ணையும் பார்த்தேன். இருவரும் கல்லூரியில் படித்தாலும் என்னைப் போலவே அன்றாடங்காய்ச்சி குடும்பத்தில் இருந்துதான் வந்திருக்கவேண்டும் என அவர்கள் இருவரையும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவர்களின் சந்தோஷமே இவ்வளவு தான் என நினைத்துக் கொண்டேன்.

பெரிய குதிரை ஒன்று எனக்கு முன்னே ஓடியது. அதன்மேலே சுமார் பத்து வயது கொண்ட சிறுவன் உட்கார்ந்திருந்தான். கையில் ஒரு சின்னக்குச்சியை வைத்துக் கொண்டு அந்தப்பெரிய குதிரையை, கடற்கரையில் பொழுதைப்போக்கிக் கொண்டிருந்தவர்கள் முன்நிறுத்தி 'சார் ஏறுங்க சார், நல்ல குதிரை சார், நான் கூடவே ஓடிவரேன், தைரியமா ஏறுங்க சார்' என்று குதிரைச் சவாரிக்கு கூப்பிட்டுக் கொண்டி ருந்தான். என்னை அவன் திரும்பிக் கூட பார்க்கவில்லை.

குதிரை மீதிருக்கும் சிறுவனுக்கு மெலிந்த உருவம்தான் ஆனால் நோஞ்சான் போல் இல்லை. அவன் முடி காற்றில் கலைந்திருந்தது. இந்தச் சிறுவன் மட்டும் சில நூறு வருடங்களுக்கு முன் பிறந்தி ருந்தான் என்றால், இவன்கூட ஒரு குதிரை வீரனாகியிருப்பான். ஊர் சுற்றித்திரியும் சோம்பேறிகள் இவனைப் பார்த்து அச்சம் கூட கொள்ளலாம். பாவம், காரும் விமானமும் சீறிப்பாயும் இந்தக் காலத்தில் இவன் தப்பிப் பிறந்து கஷ்டப்படுகிறான் என நினைத்தேன்.

காற்று என் முகத்தை முட்டிக் கொஞ்சியது. சுகமாய் தூங்கிப் போனேன்.

ஒரு அழகிய வெள்ளைக் குதிரை, நான் தான் அந்தக்குதிரை, மிக வலிமையான குதிரை நான். இந்தப் பட்டணத்துத் தெருவை எல்லாம் நாற்கால் பாய்ச்சலில் சுதந்திரமாய்ச் சுற்றி வருகிறேன் நான். என் பழைய முதலாளிகளின் வீடுகளுக்குப் போய் அவர்கள் முன்னே நிற்கிறேன். யாரும் ஒரு குதிரை வந்ததைப் பற்றிப் பொருட்படுத்தக்கூட இல்லை. நான் குதிரையாகவே என் பழைய முதலாளிகளின் கால்களின் முன் மண்டியிட்டு என்னை வைத்துக் கொள்ளுமாறும், நான் நல்ல குதிரைதான் என்று கூறியும் கெஞ்சியும், செருப்பும், பூட்சும் அணிந்த அவர்களின் கால்களை முத்தமிடுகிறேன். என் பழைய முதலாளிகள் ஒவ்வொருவரும் தங்களின் கார்களை எனக்குச் சுட்டிக் காட்டி 'குதிரை வேண்டாம்' என வெறுப்பாகக் கூறிப்போய் விடு கிறார்கள். 'யாருக்கும் நான் வேண்டாம் என்றால் நான் போகிறேன்' என்று கோபமாகக் கத்தியபடி கடலை நோக்கிக் கனைத்துக்கொண்டே ஓடுகிறேன் நான். கருநீலக் கடல் அலைகளில் நான் மூழ்கித்தண்ணீரில் தத்தளிக் கிறேன்...

'சே... இது என்ன கனவு!' என்று விழித்தேன். தெரியாமல் தூங்கிப் போனேன். அதற்குப் பரிசாய்ப் பயங்கரமாய் ஒரு கனவு. நல்லவேளை எனக்கு இந்த டிரைவிங் வேலையாவது தெரிந்ததே என நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

பிறகு எழுந்து நுரைக்கும் அலைகளைப் பார்த்துக்கொண்டே

நடக்க ஆரம்பித்தேன். ஏற்றுமதிக் கம்பெனியில் வேலை செய்யும் என் மனைவியை நினைத்தேன். திருமணமாகி பத்து வருஷம் ஆகியும் குழந்தை இல்லை என்ற வருத்தம் எனக்கும் அவளுக்கும் இருந்தது. 'அதுவும் பொறந்து நம்பகூட கஷ்டப்படக் கூடாதுன்னு தான் சாமி நமக்கு குழந்தை தரவேயில்லை' என அவள் ஆணித்தரமாய் வருத்தத்தை மறைத்தும் நியாயப்படுத்துவது போலவும் கூறுவதை நினைத்த போது எனக்கு சிரிப்புத் தான் வந்தது.

தூரத்தில் சிவப்பு நிறம் கொண்ட புதிய கார் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. நடுத்தர வயதுள்ள பருமனான ஒருவர், முகம் எல்லாம் வியர்த்து காற்றிறங்கிய காரின் முன் சக்கரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் மனைவி என்பதற்குப் பொருத்தமாய் ஒரு பெண் அவர் அருகில் நின்று கொண்டிருந்தாள். அந்தக் காருக்கு முன்னே பருமனான ஆசாமியின் சாயலை அதிகம் கொண்டிருந்த ஒரு சிறுமி மெல்லிய வெள்ளை நிற ஃப்ராக்கை அணிந்து நின்று கொண்டிருந்தாள். அந்தச் சிறுமி இரண்டு கைகளாலும் ஒரு பெரிய வண்ணப் பந்தினை அவள் வயிற்றோடு ஒட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள். நான்கு அல்லது ஐந்து வயது தான் அந்தச் சிறுமிக்கு இருக்கும். பால் வடியும் முகம். அவள் பந்தினை வயிற்றோடு ஒட்டிப் பிடித்திருந்த தோற்றம் எனக்கு நிறைமாத கர்ப்பிணிப் பெண்களை நினைவூட்டியது. அந்தச் சிறுமி எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஆங்கிலப் பள்ளிக்கூட பாடல் ஒன்றினை உரக்கப் பாடிக்கொண்டிருந்தாள். அந்தச் சிறுமியுடன் எனக்கு விளையாடத் தோன்றியது. எத்தனை முதலாளிகளின் குழந்தைகளுக்கு அன்புமிக்க விளையாட்டுத் தோழன் நான் என்று எண்ணிப் பார்க்கையில் எனக்கே மலைப்பாக இருந்தது.

அந்த மூவரையும் நான் கடந்து சென்றபோது பருமனான மனிதர் என்னைப் பார்த்து "இங்க மெக்கானிக் யாரையாவது தெரியுமா? டயர் பஞ்ச்சர்" என்றார்.

'நானே பார்க்கிறேன் சார்' என்று கூறி அவரைப்பார்த்துப் புன்னகைத்தேன். நேற்று வரை நான் ஓட்டிக்கொண்டிருந்ததும் இதே போன்ற கார்தான். அதன் வண்ணம் பழுப்பு - இது சிவப்பு. டேஷ்போர்டு அருகில் தொங்கிக்கொண்டிருந்த சாவிக்கொத்தினை எடுத்து டிக்கியைத் திறந்து ஜாக்கியை எடுத்தேன். நான் வேகமாகவும், நளினமாகவும் வேலை செய்வதைப் பார்த்து அவர்கள் ரசிப்பது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

> *'திருமணமாகிப் பத்து வருஷம் ஆகியும் குழந்தை இல்லை. அதுவும் பொறந்து நம்பகூட கஷ்டப்படக் கூடாதுன்னு தான்- சாமி நமக்குக் குழந்தை தரவேயில்லை' என்று அவள் ஆணித் தரமாய் வருத்தத்தை மறைத்தும் நியாயப் படுத்துவது போலவும் கூறுவதை நினைத்த போது எனக்கு சிரிப்புத் தான் வந்தது!'*

சிறிது நேரத்தில் ஸ்டெப்னியை காரில் பொருத்திப் பஞ்ச்சரான டயரை உருட்டிக்கொண்டு போய் டிக்கியில் வைத்தேன். நிச்சயமாகப் பணம் தருவார்கள் என நினைத்தபடி சாவிக்கொத்தினை அவர் கையில் கொடுத்தேன்.

சாவிக்கொத்தினை வாங்கிக் கொண்டு என்னை உற்றுப் பார்த்தார். வாங்க காபி சாப்பிடுவோம் என்று அன்புடன் என்னை அழைத்தார். எனக்கு காபி வேண்டாம், பணம்தான் வேண்டும் என்று அவரிடம் கத்திவிடலாம் போல எனக்குத் தோன்றினாலும், 'பரவாயில்லை சார் காபி வேண்டாம்...' என இழுத்தேன் நான்.

'நீங்க இப்ப நீலகண்டன் சார் கிட்ட வேலைப் பார்க்கலியா?' என என் முன்னாள் முதலாளியின் பெயரைச் சொல்லிக்கேட்டார், சிவப்புக் காரின் சொந்தக்காரர்.

என்னை முன்பே இவர் அறிந்திருந்தது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. பழைய முதலாளியுடன் சிலமுறை இவரைப் பார்த்தது சட்டென்று ஞாபகம் வந்தது. அப்போது இவர் தாடியும் மீசையும் வைத்திருந்தார். இப்போது முகம் முழுக்க மழுங்கச் சிரைத்து விட்டபடியால் சுலபமாக அடையாளம் காண முடியவில்லை.

நேற்று இவர் நண்பர் பணி மாற்றம் பெற்றுப் போனதையும் நான் வேலையற்றுப் போனதையும் இயல்பாக அவரிடம் சொன்னேன். 'உங்களுக்கு யாராவது டிரைவர் தேவைப்பட்டா, என்னைச் சொல்லுங்க சார்' என்று என் மனம் அவரிடம் சொல் என்று சொன்னாலும் என் வாய் மறுத்து விட்டது.

அவர் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு விலாச அட்டையினை எடுத்து என் கையில் கொடுத்தார். 'நாளைக்கு சரியா எட்டு மணிக்கு இந்த விலாசத்துக்கு வந்துருங்க. நீங்க தான் இந்த வண்டியோட டிரைவர். இன்னிக்கு மாத்திரம் உங்களுக்கு வேலையில்லை' என்றபடி டிரைவர் சீட்டில் அமர்ந்தார். அவர் மனைவியும், மகளும் என்னைப்பார்த்துப் புன்னகைத்தனர். அவர்கள் கார் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்தேன். அவர் கொடுத்த விலாச அட்டையைப் பார்த்தேன், ஆங்கில எழுத்துக்கள் என்னை முறைத்துப் பார்த்தன, என்ன என்று தான் புரியவில்லை. அதனால் என்ன? என் மனைவியிடம் கொடுத்தால் படித்துச் சொல்லிவிடப்போகிறாள்.

இன்று எனக்கு வேலை கிடைத்த புதுமையான அனுபவத்தை என் மனைவியிடம் உடனடியாகச் சொல்லத் துடித்தேன். வீட்டுக்குப் போனதும் அவளும் என்னிடம் சொல்ல ஒரு நல்ல செய்தியைச் 'சுமந்து கொண்டு' காத்திருக்கிறாள் என எனக்கு அப்போது தெரியவில்லை!

★

# குழந்தைத் தொழிலாளர் எழுத்தாளர் முகாம்

குழந்தைத் தொழிலாளர் நிலைமையினைத் தவிர்ப்பது குறித்து, மத்திய அரசு விடுத்த சட்ட பூர்வ நடவடிக்கைக்கு முதன் முதல் இணக்கம் தெரிவித்த மாநிலம் என்கிற பெருமை 'தமிழ்நாடு' அரசுக்குக் கிடைத்திருக்கிறது.

அரசின் கொள்கை கோட்பாடுகளுக்கு வலிவு தரும் வண்ணம் செயல்படுவது நாட்டு மக்கள் கடமையல்லவா? இவ்விதத்தில் பல்வேறு அமைப்புகளும்கூட தம்முடைய நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு, மனிதாபிமானத்தோடு செயல்பட முன் வந்திருக்கின்றன.

குழந்தைத் தொழிலாளர் முறைத் தடுப்பின் அடிப்படையில், அண்மையில் திருப்பூரில், எழுத்தாளர்கள் முகாம் ஒன்று சிறப்புற நடைபெற்றது.

யூனிசெஃப் நிறுவனமும், சேவ் தன்னார்வ அமைப்பும் இரண்டு நாட்கள் இந்த முகாமை நடத்தின.

திருப்பூர் நகராட்சி ஆணையர் திரு. பாலசந்திரன், தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் திருமதி மு. சுலோச்சனா ஆகியோர் முன்னிலை வகித்திட, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தானம் இ.ஆ.ப., அவர்கள் இந்த முகாமைத் தொடங்கி வைத்தார். இந்த இரண்டு நாள் முகாம் தேவாங்கபுரம் நகராட்சிப் பள்ளி, பிருந்தாவன் ஓட்டல் ஆகிய இடங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

புகழ்பெற்ற 57 எழுத்தாளர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அவற்றுள் சிலர் ஆற்றிய உரையின் குறிப்பிடத்தக்க பகுதிகள் வருமாறு:

**ஜெயந்தன்:**

குழந்தைத் தொழிலாளர்கள் விதைநெல்லைப் போன்றவர்கள். குழந்தைகள்தான் வஞ்சனையின்றி இருக்க முடியும். மனித வாழ்க்கையில் சரியான பருவம்



குழந்தைப் பருவம். அதைக் குழந்தைத் தொழிலாளிகள் தவறவிடுகின்றனர். குழந்தைத் தொழிலாளர்கள் ஏன் முற்பட்ட ஜாதிகளிலிருந்து வருவதில்லை? அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். படிப்பறிவில்லாத ஏழை மக்கள் வேலைக்கு அனுப்புகிறார்கள். சமூக வன்முறை இது. வளர்ப்பு மிருகமாகிறான் குழந்தை.

**பா. செயப்பிரகாசம்:**

'உலக மயமாக்கல், பொருளாதார சீர்திருத்தங்கள் மனிதர்களைப் பண்டப் பொருளாக்குகிறது. கிராமங்களும், மரபு சார்ந்த பண்பாடுகளும் சிதைந்து விட்டன. கல்வி என்பது வன்முறை ஆகிவிட்டது. உழைப்பும், கற்பனையும், விளையாட்டும் இணைந்து கல்வியைக் கற்கும் நிலை மாறிவிட்டது. சமூக மேன்மை குறித்த கருத்தாக்கங்களில் எழுத்தாளர்கள் ஈடுபடுதல் அவசியம். இன்றைய குழந்தைகளுக்குக் குழந்தை வயது உண்டு. குழந்தைப் பருவம்தான் இல்லை!"

**மேலாண்மை பொன்னுசாமி:**

'வறுமையே குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைக்குக் காரணம். குழந்தைகள் தங்கள் தொழிலாளர் நிலையிலான சோகங்களை அறியாமல் சந்தோஷப்படும் சூழல் துயரமானது. பெற்றோர்களின் விழிப்புணர்வு இப்பிரச்சினைக்கு மிகவும் அவசியம். குழந்தைகள் உழைப்பதோ, தொழில் கற்றுக் கொள்வதோ தவறில்லை. ஆனால் கல்வியையும், குழந்தைப் பருவத்தையும் இழந்து வெறும் தொழிலாளியாக நீடிக்கக் கூடாது.'

**'தன்னார்வக் குழுக்களும், செயலாக்கமும்' என்ற தலைப்பிலான அமர்வில் திண்டுக்கல் அமைதி அறக்கட்டளையைச் சார்ந்த பால்பாஸ்கர்:**

'பெரும்பான்மையான தொழிற்சாலைகளில் தொழிலாளர்களே தம் குழந்தைகளைத் தொழிலாளர்களாக்குகின்றனர். இது

குடும்ப வருமானத்தை அதிகரிக்கச் செய்தாலும், உண்மையில் வயது வந்தவர்களின் வேலை வாய்ப்பை இது குறைக்கிறது. குழந்தைத் தொழிலாளர் குறித்த கணக்கெடுப்பு என்பது கண் துடைப்பாக இருக்கிறது".

**டாக்டர் ஜீவானந்தம்:**
**(தமிழகப் பசுமை இயக்கம், ஈரோடு)**

"குழந்தைத் தொழிலாளர்கள் பல்வகையான உடல் நோய்களுக்கு ஆளாகிறார்கள். பாலியல் சரண்டல் போன்றவை அவர்களை மன நோய்க்கும் இட்டுச் செல்கிறது. சுற்றுலாத் தலங்களில் குழந்தைகள் வேறு வகையான பாலியல் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். சுற்றுச்சூழல் கேடு உள்ள இடங்களில் எல்லாம் குழந்தைகள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள்.

**டாக்டர் முருகநாதன்:**
**(திருப்பூர் சமூக சேவை அமைப்பு)**

'பிரச்சினை சிக்கலானது என்று ஒதுங்கிப் போகாமல் அணுக வேண்டி உள்ளது. கல்வியால் விழிப்புணர்ச்சியும், சிந்தனையும் வளரும். குழந்தைத் தொழிலாளர் உழைப்பு என்பதை விட மீட்பு என்பது சரியாக இருக்கும். தொடர்ச்சியான விழிப்புணர்வு பிரச்சாரங்கள், மாற்றுக் கல்வி இவை சரியான தீர்வுக்கு இட்டுச் செல்லும். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்கிறார்கள். இருவரும் கல்லாகிவிட்டதைத்தான் அப்படிச் சொல்கிறார்களோ என்னமோ!'

**தனுஷ்கோடி ராமசாமி:**

'குழந்தைகள் விளையாட்டை மறந்துவிட்டார்கள். குழந்தைப் பருவத்தை இழந்துவிட்டார்கள். குழந்தைகள் குழந்தைகளாக இருக்கும் வாய்ப்பைத் தர வேண்டும். காந்தியின் ஆதாரக் கல்வியை மறுபரிசீலனை செய்ய வேண்டும்'.

**தோப்பில் முகமது மீரான்:**

'பீடி சுற்றும் குழந்தைகள் வாழ்க்கை அவலமானது. தன் மனைவி கல்யாணத்தின் போது இவ்வளவு பீடி சுற்றினாள். பிறகு காச நோய் காரணமாகச் சுற்றும் பீடி அளவு குறைந்து விட்டது என்று கடிதத்தில் மூன்று முறை தலாக் என்று எழுதி விகாகரத்து பெறுவோர் உண்டு. இவ்வாறான நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும்'.

**கந்தர்வன்:**

'குழந்தைத் தொழிலாளியாக இருந்தவன் நான். மளிகைக் கடை, மாடு மேய்த்தல் உட்பட பல வேலைகளைச் செய்தவன். ஆனால் அதிலிருந்து மீண்டு கல்வி கற்று அரசாங்க வேலையில் இருக்கிறேன். தன்முனைப்பும், விடுபடுகிற உத்வேகமும் என்னுள் இருந்தன. என் அனுபவங்கள் பலவற்றைப் பதிவு செய்திருக்கிறேன்'.

**ரவிசுப்பிரமணியன்:**

'பெர்க்மனின் திரைப் படங்களில் அவரின் சிதைந்த பால்ய பருவத்தைக் காணலாம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் மூலம் சிறு விழிப்புணர்வு அம்சங்களைக் கொண்டு செல்லலாம்'.

**ஞான ராஜசேகரன்:**

'மிகவும் மோசமான முறையில் குழந்தைகள் சினிமாவில் சித்திரிக்கப் படுகிறார்கள். கல்வி, வேலை வாய்ப்புகள் குறித்த நமது மதிப்பீடுகள், கணிப்புகள் மாற வேண்டும். குழந்தைகளின் மனோபாவங்களைச் சீராக்கும் குழந்தை இலக்கியங்கள் படைக்கப் பட வேண்டும். பிச்சை எடுக்கும் பழக்கத்திற்குக் குழந்தைகள் ஆட்படுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்'.

> **'குழந்தைத் தொழிலாளர்கள் விதைநெல்லைப் போன்றவர்கள்...வறுமையே குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைக்குக் காரணம்... தொழிலாளர்களே தம் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது தவறு... குழந்தைகள் வேறுவகையான பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாகிறார்கள்...**

பனியன் உற்பத்தியாளர்கள் சார்பில் பேசிய சம்பத்குமார், கே.பி. கோவிந்தசாமி ஆகியோர் ஏற்றுமதி தொழிலில் குழந்தைத் தொழிலாளர் பெருமளவில் குறைக்கப்பட்டு வருவதையும், சட்டங்களைச் சரியாக அமல்படுத்த முயல்வதையும்,




ஒன்றுபட்ட கட்டுணர்வால் இதைத் தவிர்க்க இயலும் வகைகளையும் குறிப்பிட்டனர். முதல் நாள் நிகழ்ச்சிகளை பூவண்ணனும், சி.ஆர். ரவீந்திரனும் தொகுத்து வழங்கினர்.

**பூவண்ணன்:**

'குழந்தைத் தொழிலாளர்களை மீட்கிற பணியில் ஈடுபடுதல் அவசியம். ஆந்திராவில் ஒரு கிராமத்தில் களப்பணியில் ஈடுபட்டவர் ஒருவரைச் சந்தித்தேன். கனகாம்பரம் பூவை எடுக்கும் வேலை செய்யும் சிறார்கள். அவர்களை மீட்க அவர்கள் செய்யும் வேலையைப் பெற்றோர்க்கு கொடுத்து 10 மடங்குச் சம்பளம் அதிகம் கொடுத்த சிறுவர்கள் தவிர்க்கப்பட்டு பள்ளிக்கு அனுப்பப்பட்டனர்' என்றார்.

இரண்டாம் நாள் அமர்வுகளைத் தமிழ்நாடன் நெறிப்படுத்தினார். செ. கணேசலிங்கம் தன் பேச்சில் நடுத்தர விவசாயிகள் பாதிக்கு மேலான சதவீதமாய் உள்ள நாடுகள் அவர்களின் சிக்கல்களையும், அவர்களின் குடும்பக் குழந்தைகளின் நிலைமையையும் விவரித்தார். குழந்தைகளால் குடும்பமே உழைப்புச் சக்தியாவதை விளக்கினார். சோ. தர்மன் 'அரசின் திட்டங்களை அமல்படுத்துவதில் நிறையக் குறைபாடுகள் உள்ளன. தந்தையை இழந்த குடும்பத்தில் குழந்தைகள் ஏதாவதொரு தொழிலுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தொண்டு நிறுவனங்களும் திருப்தியாகச் செயல்படவில்லை. மூழ்கிப் போனபின்பு எழுத்தாளர்களைக் கூட்டி அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்பது ஒவ்வொரு பிரச்சினையிலும் நடைபெறுகிறது. எழுத்தாளர்கள், கலைஞர்களின் முக்கியத்துவத்தை உணரத் தவறியதால் பல முட்டுக்கட்டைகளைக் காண முடிகிறது' என்றார்.

**சா. கந்தசாமி:**


'விவசாயம் வாழ்க்கையாகிப் போன தஞ்சையில் சிறுவயதில் விவசாயத்தைத் தொழிலாகக் கற்கும் சிறுவர்கள் குழந்தைத் தொழிலாளர் ஆவதில்லை. வாழ்க்கையையும் கற்று மேம்படுகிறார்கள்'.

**செ. யோகநாதன்:**

'அச்சுத் தொழிலில் குழந்தைகளின் உடம்பில் விஷம் போல் வர்ணங்கள் புகுந்து வாழ்நாளைக் குறைக்கின்றன. தமிழ்ப் பத்திரிக்கைகள், திரைப் படங்கள் குழந்தைகளுக்குச் சரியான வழிகாட்டியாக இல்லை. குழந்தைகளுக்கான இலக்கியம் வெகு கவனத் துடனும், தீவிர எண்ணத்துடனும் கொண்டு செல்லப்பட வேண்டும்'.

கருணா. மனோகரன்:

''இலாபநோக்கமுள்ள மூலதனம் உலகெங்கும் சந்தையை நோக்கி ஆதிக்கம் செலுத்துகிறது. அரசியல் தலைமை இல்லாமல் இயங்கும் தோற்றம் அபாயகரமானது. குழந்தைத் தொழிலாளர்களுக்கான தனித்த தொழிற் சங்கங்கள் அமைப்பது அவசியம். பணம் ஆளுமை சக்தியாகி உள்ளது, உடைபட வேண்டும்'.



பொன்னீலன்:

'குழந்தை படிக்கவோ, வேலை செய்யவோ - தங்களின் விருப்பதை சுயமாக வெளிப்படுத்த முடிவதில்லை. முந்திரித் தோட்டங்களில் குழந்தைகள் 12 மணி நேரம் சுரண்டப் படுகிறார்கள். விஞ்ஞானமுறை பாடங்களைக் குழந்தைத் தொழிலாளர்களுக்குத் தரவேண்டும்'.

பூமணி, சாந்தாதத், பாமரன், தாமரை, செல்லக் கணபதி, அம்சலட்சுமி போன்றோரும் தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

முகாமின் நிறைவுரையை ஞானி நிகழ்த்தினார். 'சந்தைப் பொருளாதாரம் இன்றைக்கு உலகளாவிய முதலாளித்துவம் வாழ்க்கையைச் சீரழித்துவிட்டது. வரலாற்றில் சாதாரண மனிதனின் பங்கு முற்றிலும் மறுக்கப்படுகிறது. மனிதம் விலை பேசி வாங்கப்படுகிறது. குழந்தைகளைப் போலவே பெண்கள், ஆதிவாசிகள், தலித்துகள் புறக்கணிக்கப் படுகிறார்கள். குழந்தைகள், தலித்தியம், சூழலியம், பெண்ணியம் போன்றவற்றை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டு போராட வேண்டும்'.

மாலை அமர்வில் எழுத்தாளர்கள் நான்கு குழுக்களாக - பொன்னீலன், பூமணி, தனுஷ்கோடி ராமசாமி, ஞானி தலைமையில் கலந்துரையாடி விவாதங்களைத் தொகுத்து வழங்கினர்.

இரவில் எழுத்தாளர்கள் கலந்து கொண்ட பொதுநிகழ்ச்சி நடைபெற்றது. வாழ்த்துரை வழங்கிய திருப்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே. சுப்பராயன் பேசினார்:

'14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்படவில்லை. கல்வி விலைபொருள் ஆகும்போது ஏழைகள் படிக்க வாய்ப்பில்லை. கி.பி.2030ல் கூட இந்தியாவில் 54 சதவீதம் மக்கள் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருப்பர் என 'யுனெஸ்கோ' புள்ளி விவரம் தெரிவிக்கிறது. கல்வி தரும் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும். அடிப்படை சமூக மாற்றம் இல்லாமல் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. பெற்றோர்க்குப் பெரும் பொறுப்பு உண்டு'.

குழந்தைத் தொழிலாளர்களை மையமாகக் கொண்டுள்ள சில திரைப்படங்களைப் பற்றிக் கட்டுரைகளைக் கொண்ட யமுனா ராஜேந்திரன் எழுதிய 'குழந்தைகளின் பிரபஞ்சம்' நூலை செ. யோகநாதன் வெளியிட்டார்.

'வேண்டாம் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை'- சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற அமராவதி, சாந்தாதத், சு. வேணுகோபால், அம்சகோபால் முருகன், சங்கர் குமார், பாலகிருஷ்ணன் மல்லிக் ஆகியோருக்குப் பரிசுகளை வழங்கி ஞான ராஜசேகரன் பேசினார்.

சிறுகதைகள் இடம் பெற்ற 'பிஞ்சுக் கரங்கள்' நூலை ஜெயந்தன் வெளியிட்டுப் பேசினார். நொய்யல் பாதுகாப்புக் குழு தலைவர் நடராஜன் பெற்றுக் கொண்டார். குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை மையமாக்கி தயாரிக்கப்பட்ட பூமணியின் 'கருவேலம் பூக்கள்' திரைக்கதை நூலை கருணா மனோகரன் வெளியிட்டார். பூமணி தன் திரைப்பட அனுபவங்களை விவரித்தார். எழுத்தாளர்களின் குழு விவாதங்கள் தீர்மானங்களாகப் படிக்கப்பட்டன. பாலகிருஷ்ணன் மல்லிக் நன்றி கூறினார்.

தொகுப்பு:
எஸ்.பி.எம். சுப்ரபாரதி மணியன்

# இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை (வரையறை)

தபால் பை எண்.2
அச்சங்குளம்-623 601, கமுதி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| தந்தி | : "இராம்நாடு ஸ்பின்" | |
| பேக்ஸ் | : 04564 - 21386 (பரமக்குடி) | |

தொலைபேசி எண்கள்:

| | | |
|---|---|---|
| ஆட்சியர்(தனி) | : 04576-65212 | (அபிராமம்) |
| அலுவலகம் | : 04576-65237 | (அபிராமம்) |
| ஆலை | : 04576-65239 | (அபிராமம்) |
| ஆட்சியர் இல்லம் | : 04564-21386 | (பரமக்குடி) |

உற்பத்தியாகும் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 34நெ | 40நெ | கோன் நூல்கள் |
| 36நெ | 60நெ | கோன் நூல்கள் |
| 20நெ | 40நெ | சிட்ட நூல்கள் |
| 60நெ | 2/17நெ | சிட்ட நூல்கள் |
| 2/40நெ | 2/60நெ | சிட்ட நூல்கள் |

எங்களது ஆலையில் நவீன இயந்திரங்களைக் கொண்டு மிகவும் தரமான துணிநூல் தயாரிக்கப்படுகிறது. எங்களது ஆலையில் உற்பத்தியாகும் நூல்கள் அனைத்தும் பாவுக்கு ஏற்றவை. துரிதப்போக்குவரத்து, வங்கி சேவை ஆகியன உள்ளன. நெசவுத்தொழில் நிறுவனங்களின் ஆதரவினை வேண்டுகிறோம்.

- ஆட்சியர்

“

தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்களில் - பொதுவான குறைபாடுகள் ஏதாவது அரசின் கவனத்திற்கு வராமல் விடுபட்டிருக்கலாம்; அப்படிப்பட்ட பொதுவான குறைகள் பற்றிச் சுருக்கமாக இப் பகுதிக்குப் பொதுமக்கள் எழுதலாம்; அது பற்றி உரிய உயர் அதிகாரிகளிடம் தொர்டர்பு கொண்டு அக் குறைபாடு நீக்க வகை செய்து - அதுபற்றி இப் பகுதியிலேயே தெளிவு படுத்தப்படும்.

”

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா, கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்காடம்பட்டி ஊராட்சி மன்றம் லெட்சுமியூரில் 2000 மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கு குடிதண்ணீர் கிணறு வறண்டுவிட்டது; மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் வறண்டுவிட்டது. காரணம் அந்த பகுதியில் பணக்கார விவசாயிகள் 700 அடி ஆழம் போர் போட்டு தண்ணீர் குடம் 50 பைசாவீதம் விற்பனை செய்கிறார்கள். அரசு போடும் போர்வெல் கிணறு ஆழம் 150இல் இருந்து 200 அடி ஆழம். எனவே அரசு 700 அடி ஆழம் 6½ இஞ்சி போர் போட்டு இந்த ஊர் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- எஸ்.வீமன்
தலைவர்
வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்றம்.

**தீர்வு:**

லெட்சுமியூரில் வறட்சி நிவாரணத்திட்டத்தின்கீழ் 1 அடிபம்பு அமைக்க அனுமதி வழங்கப்பட்டு அமைக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே உள்ள அடிபம்பில் (எண்.245இல்,) தூர் எடுக்கவும் அனுமதி வழங்கப்பட்டு தூர் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் கோரியபடி சிறப்பினமாக 700 அடி 6½ ஆழ்குழாய் அமைப்பது தொடர்பாகத் திருநெல்வேலி உதவி நிர்வாகப் பொறியாளரின் தொழில்நுட்பத் தெளிவுரை கேட்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- எஸ். அப்பாத்துரை
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், கடையம்.

**பிரச்சினை:**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஒன்றியம் மேற்பனைக்காடு கிராமம், மாவட்டத்திலேயே பெரிய கிராமம். இவ்வூர் மக்கள் எல்லா வசதிகளையும் பெற வெளியூர்களுக்குத்தான் செல்லவேண்டும். இவ்வூருக்கு அறந்தாங்கியிலிருந்து தடம் எண்.1 பேருந்தும், ஆலங்குடியிலிருந்து தடம் எண்.15 பேருந்தும் வந்து செல்கின்றன. இந்த இரண்டு பேருந்துகளும் சரியான நேரத்திற்கு வருவதில்லை. சில சமயங்களில் வருவதே கிடையாது. இந்தப் பேருந்துகள் இரண்டும் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. பாதி வழியிலேயே நின்று பயணிகள் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். இந்த இரண்டு

பேருந்துகளைத் தவிர வேறு எவ்வித பேருந்து வசதியுமில்லை. எனவே இவ்வூருக்கு இரண்டு பேருந்துகளையும் புதிய பேருந்துகளாகவும், சரியான நேரத்திற்கு வரும்படியும் இயக்கித் தருமாறு ஊர்மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**- எஸ்.கே.பஷீர் அகமது**
**மேற்பனைக்காடு (மேற்கு)**
**அறந்தாங்கி ஒன்றியம்**
**புதுக்கோட்டை மாவட்டம்.**

**தீர்வு:**

தற்போது நகரப்பேருந்து தடம் **எண்.1க்கு டி.என்.29/எண்.0258** மற்றும் நகரப்பேருந்து தடம் **எண்.15க்கு டிஎன்.63/எண்.0029** என்ற குறைந்த வயதுடைய பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நகரப் பேருந்துகளுக்குப் பதிலாகக் காலக்கிரமத்தில் புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்பதையும், அதுவரையில் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் மேற்படி நகரப்பேருந்துகளில் உள்ள பழுதுகளை முற்றிலுமாக நீக்கி, தினசரி பராமரிப்பு வேலைகளை நல்ல முறையில் பார்த்து, உரிய வழித்தடங்களில், உரிய கால அட்டவணைப்படி பயணத்தடையேதுமின்றி - இயக்கிட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- பொது மேலாளர்**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை.**

**பிரச்சினை:**

திருச்சி மாநகராட்சி 52ஆவது வார்டு பகுதியில் அடங்கிய கல்லங்காடு கிராமத்திற்குப் பாதை வசதி கிடையாது. கோர்ட் அருகில் உய்யக்கொண்டான் ஆற்றின் வடபுறம் கரையே எங்கள் கிராமத்தின் பாதை. இதைத்தவிர வேறுபாதை எங்கள் கிராமத்திற்குக் கிடையாது. இப்பாதை பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்டத்திற்குச் சொந்தமானது. எனவே பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்புக் கோட்டம் எங்கள் கிராமத்தின் கரைப்பாதையில் பொது மக்கள், வண்டி வாகனங்கள் செல்வதற்குத் தடை விதித்துள்ளது. ஆனால் எங்கள் கிராம மக்களுக்கு வேறுபாதை இல்லாத காரணத்தால் போக்குவரத்துப் பாதையாகப் பயன்படுத்தி வருகிறோம். கோர்ட் அருகில் உய்யக்கொண்டான் ஆற்றுப்பாலத்தில் இருந்து கிழக்குப்பக்கம் செல்லும் வலதுகரை, அண்ணாநகர், சுடுகாடு, காயிதேமில்லத் நகர் பாதையை மட்டும் திருச்சி மாநகராட்சி பாதை (தார்ச் சாலை) அமைத்துக் கொடுத்துள்ளது. இப்பாதையும் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. எங்கள் கிராமத்தின் பாதை பல ஆண்டுகளாகப் பராமரிப்பு இல்லாத காரணத்தால் குண்டும் குழியுமாக மிகவும் மோசமான பள்ளம் படுகுழியுமாக, மண் அரிப்பினால் பாதை சேதமடைந்து நாளுக்கு நாள் மேலும் மோசமடைந்து வருகிறது. இதனால், பள்ளி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு முடியாத அளவு பாதை இருக்கிறது. பொதுமக்கள் நடந்து செல்வதற்குச் சொல்ல முடியாத அளவுக்கு துன்பப்பட்டுச் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுப்பணித்துறையின் அனுமதியுடன் திருச்சி மாநகராட்சிப் பாதை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**- ஆர். மலையாளி**
**கல்லங்காடு கிராமம்**

**தீர்வு:**

கல்லங்காடு கிராமத்திற்குச் செல்லும் பாதையானது கோர்ட் அருகில் உள்ள உய்யக்கொண்டான் ஆற்றின் வடபுறம் உள்ள பாதை வழியாகத்தான் செல்லவேண்டும். இந்தப் பாதையானது பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்டத்திற்குச் சொந்தமானது. எனவே, மாநகராட்சி நேரிடையாக இந்த பாதையைத் தார் சாலையாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள இயலாது. இருப்பினும், பொதுமக்கள் நலன் கருதி இந்த கல்லங்காடு கிராமத்திற்குச் செல்வதற்கு கோர்ட் செட்டிப்பாலம் முதல் பொதுப்பணித்துறை ஆற்று பாதுகாப்பு கோட்டம் கரையோர காவலலர் குடியிருப்பு வரை (லஸ்கர்ஷெட் வரை) மாநகராட்சியே தார்சாலை அமைக்க ரூ.6,20,000க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள செய்பொறியாளர், பொதுப்பணித்துறை, ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களின் அனுமதிக்காக அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவரிடமிருந்து அனுமதி கிடைத்ததும் கல்லாங்காடு கிராமத்திற்குத் தார்சாலை அமைக்கும் பணி நடைபெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- ஜி.பிச்சை, பி.எஸ்ஸி.,**
**மாநகராட்சி ஆணையர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**
**திருச்சிராப்பள்ளி-1.**

**பிரச்சினை:**

நகராட்சி தேர்தல் நடந்து 4 மாதங்கள் ஆகியும், எங்கள் பகுதியில் எந்த அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை. தெருவிளக்குகள் சில 3 வருடங்களாக



எரியவில்லை. நாகூர் தர்காவையும் புகைவண்டி நிலையத்தையும் இணைக்கும் பிரதான சாலையாக இது இருந்துவருவதால், இந்தப் பகுதிக்கு சகல அடிப்படை வசதிகளும் மிகவும் அவசியமாக உள்ளது. ஆகையால் சம்மபந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி ஆகவேண்டியதைச் செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ். ஹெச். ஏ. காதர்**
**மக்கள் நலத் தொண்டர்**
**வார்டு எண்.6(நாகை நகராட்சி)**
**மணவாரா வடபுறம் தெரு, நாகூர்.**

**தீர்வு:**

நாகூர் பகுதியில் எல்லாத் தெருவிளக்குகளும் எரிய வைக்கப்பட்டுள்ளது. புகைவண்டி நிலையம் மற்றும் தர்காவை இணைக்கும் சாலையில் அவ்வப்போது பழுதாகும் தெருவிளக்குகளை உடனுக்குடன் எரியவைக்கப்பட்டு வருகிறது. தெருப்பள்ளி - தெரு சாலையை உயர்த்தி தார்ச்சாலையாகத் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தெருவில் இருபுறமும் (சாலகம்) மழைநீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- இ. தேவராஜ்**
**நகராட்சி ஆணையர்**
**நாகப்பட்டிணம் நகராட்சி**
**நாகப்பட்டிணம்.**

**பிரச்சினை:**


காட்டுமன்னார்குடி வட்டம், கடலையாற்றூர், காவாலகுடி, முடிக்கண்டநல்லூர், இந்தக் கிராமங்கள் வெள்ளாறு அருகில் உள்ளது. எனவே சமீபத்தில் ஏற்பட்ட பயங்கர வெள்ளம் காரணமாக மணிலா வீணாகிவிட்டது. அந்த நிலங்களில் மணல்மேடுகள் போட்டுவிட்டது. அந்த மணல் மேடுகளை நிரவாமல் எந்தப் பயிரும் செய்ய முடியாது. எனவே மணல் மேடுகளை 'செயண்ட் புல்டோசர்' மூலம் அகற்றித் தரும்படி முறையிட்டும் இதுவரை ஏந்த நடவடிக்கையும் இல்லை. மணிலாவுக்கு நிவாரணமும் இல்லை. எனவே, அரசு இந்த மணல் மேடுகளை அகற்றித் தருவதற்கு ஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**- சா. கலியபெருமாள்**
**காவாலக்குடி**

**தீர்வு:**

சேதமுற்ற மணிலா பயிருக்காகக் கீழ்க்கண்டவாறு நிவாரணத்தொகை வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

| கிராமம் | வழங்கிய நிவாரணத்தொகை ரூ. |
|---|---|
| 1. கூடலையாத்தூர் | 23,925.00 |
| 2. காவாலக்குடி | 60,425.00 |
| 3. முடிகண்டநல்லூர் | 61.700.00 |



மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவின் பேரில் 28.5.97 முதல் காவலக்குடி கிராமத்தில் வெள்ளத்தில் மணல் மேடிட்ட நிலங்களை மண்வாரி இயந்திரம் (Bull Doger) மூலம் இனாமாக அகற்றப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இரா. இராதாகிருஷ்ணன்**
**ஆணையாளர்**
**ஊராட்சி ஒன்றியம்**
**கீரப்பாளையம்.**

**பிரச்சினை:**

சேலம் மாவட்ட மைய நூலகத்தில் புத்தகங்கள் படிக்க அனுமதிப்பதில்லை. கார்டு வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் படிக்கக்கொடுக்கிறார்கள். இதனால் லைப்ரரிக்கு வந்து படிக்கும் வயதானவர்கள் நாளிதழ் படித்துவிட்டுச் செல்கிறார்கள். இவ்வளவு பெரிய நூலகம் இருந்தும் எதற்கும் பிரயோசனம் இல்லாமல் உள்ளது. தாங்கள் தயைகூர்ந்து இந்நூலகம் நன்கு இயங்க, அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இதுபற்றிக் கூறி நடவடிக்கை மேற்கொள்ளச் செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**- ஆர். சேகர்**
**சேலம்.**

**தீர்வு:**

சேலம் மாவட்ட மைய நூலகத்தில் புத்தகங்கள் அனைவரையும் படிக்க அனுமதிக்கப்படுகின்றது. புத்தகங்கள் நூலகத்திலேயே படிப்பதற்கு அனைத்து வசதிகள் செய்யப்பட்டு வாசகர்கள் தினசரி நூலகத்தைப் பயன்படுத்திவருகின்றனர்.

மேலும் பொதுமக்கள் நூல்களை வெளியில் எடுத்துச்சென்று படிக்க ரூ.50 (ரூபாய் ஐம்பது மட்டும்) செலுத்தி நூலகத்தில் உறுப்பினராகி, கார்டுகள் கொடுக்கப்பட்டு புத்தகங்கள் வெளியில் எடுத்துச்சென்று படித்துவருகின்றார்கள். நூலகத்தில் உறுப்பினர்கள் இல்லாதவர்கள் நூலகத்திலேயே நூல்களைப் படிக்க அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இடைப்பட்ட

காலத்தில் நூலகர் மாறுதல் பொருட்டு 2 மாதம் புத்தக இருப்பு சரிபார்ப்புப் பணி நடைபெற்ற காலத்தில் மட்டும் சஞ்சிகைகள் படிக்கும் பகுதியில் நூல்கள் படிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்போது நூல் இருப்பு பகுதியிலே படிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மைய நூலகத்தில் குடிமைப்பகுதி - அதாவது ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., போன்ற உயர்படிப்புக்கான படிக்கும் வசதி நன்கு செய்யப்பட்டுள்ளது. இது அங்கு குறிப்புதவி பகுதியில் நடைபெற்று வருகிறது. இத்துடன் சஞ்சிகைகள் பகுதி, தினசரி தாள் படிக்கும் பகுதி போன்ற பிரிவுகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- முதல்நிலை நூலகர்**
**மாவட்ட மைய நூலகம், சேலம்.**

**பிரச்சினை:**

எங்கள் ஊர் திண்டிவனம் வட்டம். விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் யூனியனில் அமைந்துள்ள நகர் பஞ்சாயத்தைச் சார்ந்த நல்லம்பாக்கம். எங்கள் கிராமத்தில் பத்து வருடமாக சாராயம் விற்றுக்கொண்டு வருகின்றார்கள். அதனால் பல குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றனர். நாங்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் பயன் ஒன்றும் இல்லை. பிரம்மதேசம் காவல் நிலையத்தில்



புகார் செய்தால் அவர்கள் மாமூல் வாங்கிக்கொண்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் எத்தனையோ ஊர் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த நீங்கள் எங்கள் ஊர் பிரச்சினையையும் தீர்த்து வைக்குமாறு இருகரம் கூப்பி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**- ஊர்ப்பொதுமக்கள்**
**நல்லம்பாக்கம் நகர் அஞ்சல்**
**திண்டிவனம்.**

**தீர்வு:**

நல்லம்பாக்கம் கிராமத்தில் 16.6.97 அன்று மதுவிலக்கு வேட்டை நடத்தி, தன் வீட்டின் பின்னால் நர்ட்டுச் சாராயம் விற்றுக் கொண்டிருந்த இருவரைக் கைது செய்து, தடயங்களைக் கைப்பற்றி பிரம்மதேசம் காவல் நிலையத்தில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டப்படி வழக்கு பதிவு செய்து, திண்டிவனம் குற்றவியல் நீதிபதி-2 அவர்கள் அலுவலகத்திற்குக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அனுப்பப்பட்டது. மேற்படி நீதிபதி அவர்கள் எதிரிகளை விசாரித்து, தலா ரூ.400 அபராதம் விதித்து தண்டனை வழங்கினார்கள்.

மேலும், கிராமத்தில் முக்கியஸ்தர்களை அழைத்து மதுவிலக்குக் குற்றம் புரிபவர்கள் குறித்து காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து, கிராமத்தில் மதுவிலக்கு வேட்டையாடி மதுவிலக்குக் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்க பிரம்மதேசம் உதவி ஆய்வாளர் தக்க நடவடிக்கை மேற்கொண்டுவருகிறார்.

**- காவல்துறைக் கண்காணிப்பாளர்**
**விழுப்புரம் மாவட்டம்,**
**விழுப்புரம்.**

**பிரச்சினை:**

தேனி மாவட்டத்தில் உள்ள டொம்புசேரி மற்றும் பத்திரகாளிபுரம், மீனாட்சிபுரம் ஆகிய கிராமத்திலிருந்து போடி நாயக்கனூருக்குப் பள்ளியில் படிக்க வரும் மாணவர்கள் மொத்த எண்ணிக்கை 300 பேருக்கு மேல் உள்ளனர். டொம்புசேரியிலிருந்து போடி, வழியாகச் செல்லும் பேருந்துகளில் எண்ணிக்கை இரண்டு. இதுவரை பள்ளி மாணவர்களுக்கு பேருந்து வசதி இல்லை. இப்பகுதியில் செல்லும் பேருந்துகள் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான நேரத்தில் கிடைப்பதில்லை.

பள்ளி நேரத்திற்குச் செல்லப் பேருந்து வசதியில்லாததால் பள்ளிக்கு நேரத்திற்குச் செல்ல முடியவில்லை. இதனால் பள்ளி மாணவர்கள் தலைமை ஆசிரியரால் தண்டிக்கப்படுகிறார்கள். இப்பகுதியில் மாணவர் களுக்கென பள்ளி நேரத்திற்கு டொம்புசேரி கிராமம் வரை இரண்டு பேருந்துகள் விட 'தமிழரசு' மூலம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**— பள்ளி மாணவ, மாணவிகள்**
**போடிநாயக்கனூர்**

**தீர்வு:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திலிருந்து (மதுரை) போடி-தேனி வழி மீனாட்சிபுரம், பத்ரகாளிபுரம், டொம்புச்சேரி, உப்புக்கோட்டை மற்றும் போடேந்திரபுரம் வழித்தடத்தில் 24 தனி நடைகளும், போடி-பிமீனாட்சிபுரம் தடத்தில் 4 தனி நடைகளும் மற்றும் தேனி-பத்ரகாளிபுரம் வழி டொம்புச்சேரி 2 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. பி. மீனாட்சிபுரம் கிராமத்திலுள்ள மாணவ மாணவியர்கள் போடியிலுள்ள பள்ளிகளுக்கு உரிய நேரத்தில் செல்லும் வகையில் பி.மீனாட்சிபுரத்தில் காலை 8.35க்கு புறப்படும்படியாகவும், போடியில் மாலை 5.05க்கு பள்ளி முடிந்து பி. மீனாட்சிபுரம் செல்லும் வகையில் கால அட்டவணை நிர்ணயம் செய்யப்பட்டு கூடுதல் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பேருந்து வசதிகள் நீங்கலாக, மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் கூடுதல் பேருந்து வசதி செய்து தரக்கோரியுள்ளபடியால் புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்து புதிய வழித்தடங்கள் இயக்கப்படுகின்ற பொழுது இக் கோரிக்கை குறித்து ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- நிர்வாக இயக்குநர்**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மதுரை.**

**பிரச்சினை:**

எங்கள் கிராமத்தில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். எங்கள் கிராமத்தில் பல சிற்றூர்கள் உள்ளது. பள்ளி-கல்லூரி செல்லும் மாணவ,



மாணவியர்கள் படித்தவர்கள் அதிகம் இருந்தும் நூலக வசதி கிடையாது. கிராம மக்கள் தங்களது அறிவுத் திறனைப் பெருக்கிக் கொள்ள ஒரு கிளை நூலகம் அமைத்து கொடுத்தால் பெரிதும் உதவியாக இருக்கும். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுக்கள் கொடுத்தும் பலன் இல்லை. எனவே, கிளை நூலகம் ஏற்படுத்திக் கொடுக்க உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**- கே.எஸ்.கணேசன்**
**தலைவர், டாக்டர் அம்பேத்கர் நற்பணி மன்றம், டாக்டர் அம்பேத்கர் நகர் கல்விளை அஞ்சல், செம்மறிகுளம் கிராமம் திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.**

**தீர்வு:**

அரசாணை எண்.66, கல்வி நாள் 30.1.96ல் 5,000 மக்கட் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் ஊர்ப்புற நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய அரசாணையில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஊர்ப்புற நூலகங்களில் செம்மறிகுளம் கிராமம் இடம் பெறவில்லை.

மேலும், நூலகம் திறப்பதற்கு ஐந்து நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. நூலகம் இயங்குவதற்கு வாடகை இல்லாத கட்டிடம் தரப்படவேண்டும்.
2. பின்னால் நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை மாவட்ட நூலக ஆணைக்குழு பெயரில் பத்திரப்பதிவு செய்து தரப்படுதல் வேண்டும்.
3. ரூ.1000 வீதம் தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்படவேண்டும்.
4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்படவேண்டும்.
5. ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவேண்டும்.

மேற்கூறிய ஐந்து நிபந்தனைகளையும் அவ்வூர் கிராம மக்கள் நிறைவேற்றித்தரும் பட்சத்தில் சிதம்பரனார் மாவட்ட நூலக அலுவலரை நேரில் சந்தித்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டால் பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாத கிராமங்களில் ஏதேனும் ஒன்றில், தங்கள் கிராமம் பரிந்துரை செய்து நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- இரா. கண்ணன்,**
**பொது நூலக இயக்குநர் சென்னை-2.**

**பிரச்சினை:**

எங்கள் ஊர் வ.உ.சி.மாவட்டம் விளாத்திகுளம் தாலுகா,புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. எங்களது கே. துரைச்சாமிபுரம் கிராமத்தில் டி.டி.டி.எ. தொடக்கப்பள்ளி சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் இடிந்து விட்டது. இப்பொழுது குழந்தைகள் பள்ளி நடத்தும் இடம் கிறிஸ்தவ கோவில் முன்னால் உள்ள மரத்தடியில், மழைக்காலங்களில் இடியும் நிலையில் உள்ள சி.எஸ்.ஐ. தேவாலயத்தில் வைத்து நடத்தப்படுகிறது.

சத்துணவு சமைப்பதற்கு இன்றுவரை கட்டிடம் இல்லாத காரணத்தினால் சத்துணவு அமைப்பாளர் அவர்களது சொந்தச் செலவில் வெயில்தாங்கு பந்தல் போட்டு நடத்திவருகின்றார்கள். மழைக் காலங்களில் நனைந்துகொண்டு சமையல் செய்து அமைப்பாளரும், சமயலர் அவர்களும் அதிக சிரமத்துக்கு ஆளாகிறார்கள். மேற்படி ஆசிரியர் அவர்களே எங்கள் கிராமத்து நிலையையும், பக்கத்துப் பள்ளிக் குழந்தைகள் நிலையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தி எங்கள் கிராமத்துப் பள்ளிக்கும் சாலை செப்பனிட்டு பஸ் போக்குவரத்து வசதிக்குத் தீர்வுகாணுமாறு மிகவும் தாழ்மையுடன் விண்ணப்பிக்கின்றேன்.

**- வி. செல்வராஜ்**
**தலைவர், ஊராட்சி மன்றம் கே.துரைசாமிபுரம்.**

# உதகமண்டலம் சோஷியல் சர்வீஸ் சொசைட்டி,

## உதகமண்டலம்

**பதிவு எண்.14/83**

நீலகிரி மாவட்டத்தில் உதகை சமூக சேவா சங்கம் கடந்த 30 ஆண்டுகளாக சமூக நலப் பணிகளை ஆற்றி வருவது கண்கூடு. சிறப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்காக பல நல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

பெண்கள் சங்கங்களின் வழியாக விழிப்புணர்ச்சி கல்வி அளித்து வருகிறது. 199 மகளிர் அமைப்புக்கள் இதன் வழியாக கல்வி, பொருளாதார சமூக மேம்பாடு அடைந்து வருகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஊட்டி, கூடலூர் (நீலகிரி), தாளவாடி, கொங்கர் பாளையம் (பெரியார்) போன்ற இடங்களில் மார்ச் திங்கள் பெண்கள் பேரணிகளை முன்னின்று நடத்தி ஆண்களுக்குப் பெண் சரிநிகர் சமம் என்ற கருத்தை தெளிவுபடுத்தி வருகின்றது.

*பெண்கள்:* சுய வேலைவாய்ப்பை மனதில் நிறுத்தி தனிப்பட்ட பயிற்சிகளை அளித்து சுயமாக தொழில்செய்ய ஊக்குவித்து வருகிறது. கறவை மாடுகள், தையல் இயந்திரங்கள் சிறு தொழில்கள் போன்ற வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களுக்கு கடனுதவி அளித்து அவர்களின் தன்னம்பிக்கையை வெளிக்கொண்டு வருகிறது.

இளைஞர்களின் வருங்கால வாழ்வை தொலைநோக்குடன் ஆய்வுசெய்து பல தொழிற்கல்விகளை அளித்து வருகிறது புனித இருதய தொழிற்கல்வி மையம் கடந்த 10 ஆண்டுகளாய் பல தொழிற்பயிற்சியாளர்களை வெளிக்கொண்டு வந்துள்ளது.

நீலகிரியில் மட்டுமல்ல, பெரியார் மாவட்டத்தில் தாளவாடியை மையமாக வைத்து மக்கள் குழுக்களை உருவாக்கி கல்வி அளித்து தொழில் தொடங்க கடனுதவி செய்து வருகிறது. உயர்நிலைப்பள்ளியை முடிக்க முடியாத இளம் பெண்களுக்கு தையல், மனையியல், வீட்டுப்பிராணிகளைப் பேணுதல், சமையல், தறி, கயிறு பின்னுதல் பிளாஸ்டிக் கூடைகள் பின்னுதல் போன்ற சுய தொழிற்பயிற்சிகளை இலவசமாக அளித்து பல இளம் பெண்களுக்கு ஒளி விளக்காக இருந்து வருகிறது.

பல்வேறு நலத்திட்டங்களை வங்கிகள், அரசுத்துறை நிறுவனங்கள், நல்மனம் கொண்டோர் உதவியுடன் இந்த சமூக நல சங்கம் மனித மேம்பாட்டிற்கு மேன்மேலும் உதவிக்கரம் நீட்டி வருகிறது. இந்த சமூக நல சங்கம் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவர் நிறுவனமாயினும் இனம், மொழி, சமயம் போன்றவைகளை கடந்து மனித நேயம் ஒன்றை முக்கியம் என்ற கருப்பொருளை மனத்தில் இருத்தி பணி செய்து வருகிறது.

*சுகாதாரம்* : 150 ஆதிதிராவிட இளம் பெண்களுக்கு சுகாதார துறையுடன் இணைந்து 21 நாட்கள் தாய் சேய் நலப்பயிற்சிகள் அளித்து சான்றிதழும் ரூ.500 உதவித்தொகையும் அளித்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக தீவிர போலியோ ஒழிப்பு முகாம்களுக்கு பல்வேறு வகையில் உதவி செய்து மக்கள் அனைவரும் இதில் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. 1996ஆம் ஆண்டு குன்னூர், ஊட்டியில் 200 பெண்களுக்கு சமூக, பொருளாதார சுகாதார மாதப்பயிற்சிகளை அளித்து வந்தது பல பெண்களின் முன்னேற்றத்திற்கு அடிகோலியது.

அரசு சாராத நீலகிரி, பெரியார் மாவட்ட சமூக நல அமைப்புகளை ஒருங்கிணைந்து (NGOs Forum) பொது நலனுக்காக குரல் கொடுத்து வருகிறது. சமூக நலத்துறை, இன்சூரன்ஸ், விவசாயத்துறை, மேற்படி அரசு இயந்திரங்களை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி பல நலத்திட்டங்களை வழங்கிவருகிறது.

தலித் மக்கள் பழங்குடியினர்கள் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த மக்களை அடையாளங்கண்டு அவர்களை ஒருங்கிணைத்து சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி வருகிறது.

கிராமங்களில் உள்ள பெண்கள், குழந்தைகள் நல மேம்பாட்டுத்திட்டத்தில் 1000 பெண்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடுகட்ட உதவி அளித்தும் புயல், வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட பல ஏழைமக்களுக்கு வீடுகளை பழுதுபார்க்கவும் உதவி அளித்து வருகிறது.

சுருங்கக்கூறின் உதகை சமூக நல சங்கம் மனித நேயத்தை மையமாக வைத்து 100 பணியாளர்களின் அயராத உழைப்பாலும் தவத்திரு. ஏ. ஆர். அலெக்ஸ், இயக்குநரின் ஊக்குவிப்பு ஒருங்கிணைப்பு, வழிகாட்டுதல் வழியாகவும் ஒவ்வொரு ஆண்டும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பல நூறு மக்கள் மேன்மை அடைந்து சுயகாலில் நிற்கும் அளவுக்கு உயர்த்தப்படுகிறார்கள்.

பாதர் ஏ.ஆர். அலெக்ஸ்
இயக்குநர்

**தீர்வு:**

கே.துரைசாமிபுரம் கிராமத்தில் பழுதடைந்துள்ள நிடிநி.ஏ.பள்ளி ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்றும், அப்பள்ளி தனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ளதால் இவ்வொன்றியத்தின் மூலம் மேம்பாடு செய்ய இயலாது என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், அப்பள்ளிக்கட்டிடம் தனியார் நிறுவனத்தின் கீழ் உள்ளதால் பள்ளி சத்துணவு சமையல் கூடம், அரசு விதிமுறைகளின்படி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செய்ய இயலாது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. சத்துணவு சமையல் கூடம் உடன் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி பள்ளி நிர்வாகத்தினருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

- ந. கருப்பசாமி
**ஆணையாளர்**
**ஊராட்சி ஒன்றியம், புதூர்.**

**பிரச்சினை:**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், பெருங்காட்டூர்ஊராட்சியில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு வாராந்திரச் சந்தை நடைபெற்று வந்தது. தற்சமயம் மேற்படி சந்தை நடைபெறவில்லை. ஊராட்சி மன்றங்களின் தேர்தல்கள் முடிவுபெற்ற நிலையில் ஊராட்சிக்கு நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, பெருங்காட்டூர் ஊராட்சி மன்றத்தின் முதல் கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றி (தீர்மானம் எண்.5 - ஆர்.சி.என்.1/96 நாள் 12.12.1996) வெம்பாக்கம் ஒன்றிய ஆணையாளர் அவர்களுக்கு 17.12.1996 நாளிட்ட கடிதத்தில் அனுப்பிவைக்கப்பட்டது.

ஆனால் அதற்கான (வாரச்சந்தை) நடைபெறுவதற்கான வழிவகை செய்யவில்லை. மீண்டும் இக்கிராமத்தில் வாரச்சந்தை பெற பொதுமக்களின் ஒத்துழைப்பும் அதிகம் கிடைக்க வாரச்சந்தை நடைபெற உடன் ஆவன செய்வதுடன் - வழிவகை செய்துதருமாறும் பணிவுடன் வேண்டுகிறேன்.

ஜெ. பரதமணி
**பெருங்காட்டூர் ஊராட்சி மன்ற உறுப்பினர்**
**வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செய்யார்வட்டம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

**தீர்வு:**


பெருங்காட்டூர் ஊராட்சியில் ஏற்கெனவே 16 ஆண்டுகளுக்கு முன்பு வாராந்திர சந்தை நடைபெற்றது எனவும் அதன்பிறகு அக்கிராம வாராந்திர சந்தை ஏலம் எடுக்க எவரும் முன் வராததினால் ஏலம் நடத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது. மேலும் தற்போது வாராந்திர சந்தை ஆரம்பிக்கலாம் என அக்கிராமத் தலைவர் மற்றும் மேட்டுக்குடிகள் தெரிவித்துள்ளதன் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- சு. சண்முகம்
**ஆணையாளர், ஊராட்சி மன்றம்,**
**வெம்பாக்கம்.**

---

## அதுதான்...

- கனவுகளுடன்
நுழைந்தால்
காயங்களே
பெருகி நிற்கும்!



- கவிஞர் இரா. நவமணி

## அதுதான்...

- காயங்களுடன்
நுழைந்தால்
கனவுகளே
பெருகி நிற்கும்!

## அதுதான்...

- கனவுகளும்
காயங்களுமாய்
நுழைந்தால்
ஏமாற்றங்களே
எழுந்து நிற்கும்!

## அதுதான்...

- அதுதான்
வாழ்க்கை!

STANCO

## *Granite Division*

Admn-office :
1/3, Thiruthangal Road,
Post Box No. 299,
Sivakasi - 626 123. S.INDIA.

23366 (OFFICE)
24856 (WORKS)

Telex : 0448-214 FORT
Fax : (91) 04562 - 72074 / 72543

**WE PRODUCE ONLY**
**SIVAKASI YELLOW GRANITE BLOCKS**

மருத்துவம்:

# கண்கள்

- டாக்டர் பி. குமாரவேல்
- டாக்டர் எஸ். கணேசன்

"

**உடல் உறுப்புகளில் உயர்வானது கண்தான் என்று கவிஞர்கள் பாடுவார்கள். கண்கள் - பார்வைகள் பற்றியெல்லாம் உலகப் பொதுமறையாம் திருக்குறளே விளக்குகிறது. அப்படிப்பட்ட கண்பார்வையைப் பழுதுபடாமல் பாதுகாப்பது எப்படி என்று தெளிவாக்கும் மருத்துவக் கட்டுரை இது:**

"

**கண்பார்வைக் குறைவு யார் யாருக்கு ஏற்படுகிறது?**

பொதுவாகக் கண்பார்வைக் குறைவு என்பதை வரையறுப்பது - மிகக் குறைந்த பார்வை அல்லது கண்ணில் சிறிதும் ஒளி தெரியாத நிலைமை ஆகியவற்றைக் கொண்டே ஆகும். இந்நிலைமை குழந்தைகள் முதற்கொண்டு வயதானவர்கள் வரை, மிகப் பரவலாகக் காணப்படுகிறது. இதைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமாகும். ஏனெனில், இக்குறைபாடுகள் பலவற்றை நம்மால் எளிதாகத் தடுக்க முடியும்.

**கண் பார்வைக் குறைவு என்பது வயதானவர்களுக்குத் தான் அதிகமாக வருகிறது என்பது பொதுவான கருத்து. ஆனால் குழந்தைகளுக்கும் வரும் என்கிறார்களே?**

குழந்தைகளுக்கு வரும் என்பது உண்மைதான்: அவ்வாறான கண்பார்வைக் குறைவு குறித்து அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஏனெனில் இவற்றைத் தடுக்கவில்லையென்றாலோ, அல்லது ஆரம்ப நிலையில் கவனிக்கவில்லையென்றாலோ அக்குழந்தை உயிரோடு இருந்தும் வாழ்நாள் முழுவதும் பார்வையற்ற நிலையிலேயே துன்பத்தோடு வாழவேண்டிய கட்டாயம் ஏற்படும். ஒரு குழந்தைக்கு அது பிறந்தது முதல், பார்வை சரியில்லை என்பதைப் பெற்றோராலேயே எளிதாகக் கண்டுபிடிக்க இயலும். சிலசமயங்களில் பிறந்தது முதலே கண்ணில் புரை வளர்ந்த நிலை அல்லது கண்ணில் நீரழுத்த நோய் (Glaucoma) என்பவை வர வாய்ப்புண்டு. இக்கண் புரைக்கு முக்கியக் காரணம் மிகவும் நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்து கொள்வது. மகப்பேறு காலத்தில் தாய்க்குப் போஷாக்கான உணவு கிடைக்காமை, சில வகையான அம்மை நோயினால் ஏற்படும் பாதிப்பு ஆகியவை பிற காரணங்களாகும். இவற்றை நம்மால் எளிதாகத் தடுக்க இயலும். அப்படிப்பட்ட பார்வைக் குறைவைக் கவனித்து அறிந்தால், உடனடியாகக் கண் மருத்துவரிடம் அழைத்துச் சென்றாக வேண்டும். புரைக்கோ, கண் அழுத்த நோய்க்கோ அறுவை சிகிச்சை மூலம் எளிதாக நிவாரணம் கிடைக்கும்.

அடுத்தது, குழந்தைகளுக்குச் சத்துக் குறைவினால் உண்டாகும் சில நோய்களும் உண்டு. எல்லோருக்கும் வைட்டமின்-ஏ என்பது குறைவதால்தான் கண்பார்வை குறைகிறது என்ற ஒரு பரவலான கருத்து உள்ளது. ஆனால் வைட்டமின்-ஏவுடன் புரதம் (Protein), கார்போஹைட்ரேட் (Carbo Hydrate) ஆகியவை குறையும் போதுதான் நிலைமை மிகவும் தீவிரமாகிறது. உதாரணமாக ஒரு குழந்தைக்கு வயிற்றுப் போக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதை ஆரம்ப நிலையிலேயே

# HOTEL VASANTHAM

*LIC Colony Road, (Opp. New Bus Stand) Salem-636 004.*
*Ph : 444485 (8 Lines) Fax : 0427-447627*

★ CENTRALLY AIRCONDITIONED ROOMS

★ HOT & COLD WATERS

★ ROUND THE CLOCK CHECK IN/CHECK OUT SERVICES

★ DIRECT DIALING OF STD/ISD/LOCAL

★ DISH ANTENNA CABLE SYSTEMS.

★ VASANTHA PRIYA A/C. FOR PURE VEGETARIAN CHOICES

★ MAHARAJA BAR FOR YOUR COCKTAILS

★ VASANTHAM CONFERENCE HALL AND BONQUET HALL A/C.

- FOR YOUR CONFERENCE AND MINI PARTY'S.


★ VASANTHAM TRAVELS FOR YOUR SAFE TRAVEL LINGS

★ MAJOR CREDIT CARDS ARE ACCEPTED.

கவனிக்கவில்லையானால் மேற்சொன்ன சத்துக்கள் அனைத்தும் உடலில் அதிக அளவில் குறைகிறது. இவற்றால் உடலில் மற்ற பாகங்கள் பாதிக்கப்படுவதோடு கண்ணும் மோசமாகப் பாதிக்கப்படுகிறது. Xerosis, Keratomalacia மற்றும் மாலைக் கண்நோய் ஆகியவை இதன் விளைவுகளாகும். Keratomalacia என்பது வந்தால் கண்ணின் கருவிழி (Comma) முற்றிலும் அழிந்து விடும்; பிறகு வைத்தியம் செய்வது மிகவும் கடினம். ஆனால் Xerosis மற்றும் மாலைக் கண்நோய் ஆகியவை வந்தால் தகுந்த ஊட்டச்சத்து மற்றும் நேராக வைட்டமின் ஏ ஆகியவற்றைக் கொடுத்தால், மேலும் பார்வை மோசமாகாமல் தடுக்கலாம். இந்த நிலைமை பெரும்பாலும் 6 மாதம் முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு - அதாவது தாய்ப் பாலை நிறுத்தும் நிலையில்தான் அதிக அளவில் காணப்படுகிறது.

**கண்ணின் பார்வையைக் காப்பதற்கான ஊட்டச் சத்துக்கள் யாவை?**

எளிதாக எங்கும் கிடைக்கக் கூடியது, மலிவானது கீரை. இது தவிர காரட், முள்ளங்கி, பப்பாளி, பால், முட்டை, மீன் ஆகியவற்றிலும் வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ளது. இவற்றை நாள்தோறும் உணவில் சரியாகக் கலந்து கொடுத்து வந்தால் இவ்வாறான கண் வியாதிகளே வராது.



**குழந்தைகளுக்கு வேறு ஏதாவது வழியில் பார்வைக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டா?**

உண்டு. உதாரணத்திற்கு, விளையாடும் குழந்தைகள் பலவாறாகக் கண்களில் காயம் ஏற்படுத்திக் கொள்ளும், கூர்மையான பொருட்களால் விளையாடுதல், பட்டாசு போன்றவற்றைத் தகுந்த பாதுகாப்பில்லாமல் கொளுத்துதல் மற்றும் சில இரசாயனப் பொருள்கள் கண்ணில் தெரிந்தோ தெரியாமலோ பட்டுவிடுதல் ஆகியவை சில உதாரணங்களாகும். இவற்றை எளிதாகத் தடுக்கலாம், பெற்றோர்கள் விழிப்புடன் இருந்தால். மேலும், காயம் ஏற்பட்டவுடனேயே மருத்துவரிடம் சிகிச்சைக்கு வந்தால் மேலும் மோசமாகப் பாதிக்காமல் தடுக்கலாம்.

இதுதவிர, பார்வைக் குறைபாடுகள் (Refractive errors) கிட்டப்பார்வை அல்லது தூரப் பார்வை போன்றவை இருந்தாலும் அதை ஆரம்பத்தில் கண்டுபிடித்துச் சரிசெய்ய வேண்டும். இதைப் பள்ளியில் உள்ள ஆசிரியர்களே சுலபமாகக் கவனித்து அறியலாம். ஒரு மாணவன் வகுப்பில் கரும்பலகையில் உள்ளதைக் காண மிகவும் அருகில் வந்து பார்த்தாலோ, அல்லது புத்தகத்தை முகத்துக்கு அருகாமையில் கொண்டு படித்தாலோ இக்குறைபாடு உள்ளது என்று அறியலாம்.

**இதைச் சரிசெய்யவில்லையென்றால் என்ன ஆகும்?**

இதன்மூலம் ஒரு கண்ணோ அல்லது இரு கண்களுமோ முழுவதுமாகச் செயலிழக்க வாய்ப்புண்டு. அதிக அளவில் மாறுகண் (Squit) குழந்தைகளிடத்தில் காணப்படுவதற்குப் பார்வைக் குறைபாட்டைச் சரி செய்யாததே காரணம் ஆகும். தகுந்த மூக்குக் கண்ணாடி அணிவதால் இதைத் தவிர்க்க முடியும். ஆனால் பெற்றோர்களுக்கு, சிறிய வயதிலேயே குழந்தைக்குக் கண்ணாடியா என்கிற ஒருவித அச்சம், நிலைமையை மோசமாக்கி விடுகிறது.

**வாலிப வயதில் கண்பார்வை குறைவதற்கான காரணங்கள் யாவை?**

வாலிப வயதில் - முக்கியமாகத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் தகுந்த பாதுகாப்புக் கவசங்கள் அணியாததாலும், சிறிய காயங்களுக்கோ, எந்தப் பொருளின் பிசிரோ விழுதல் போன்றவற்றுக்கு உடனடியாகச் சிகிச்சை பெறாததாலோ, சாலை விபத்துக்களாலோ கண்பார்வை குறையும் வாய்ப்புகள் உண்டு. இவற்றிலும் ஆரம்பத்திலேயே பாதுகாப்புடன் இருந்தாலோ, அல்லது உடனடியாகச் செயல்பட்டாலோ பார்வையைக் காக்கலாம். கிராமங்களில் நெற்கதிரடித்தல், முள் அடித்தல் போன்றவற்றால் கண்ணுக்கு ஆபத்து விளையும். அவர்கள் முதலுதவி என்ற பேரில் தேவையற்ற கைமுறை வைத்தியங்களைச் செய்துவிட்டு, வியாதி முற்றிய நிலையில் வருவதால் பார்வை இழப்பு உண்டாகிறது.

T.N.G.S.T.No. 183398/93-94
C.S.T. No. 54508/6-3-63

☎ : 23836/22922
தந்தி : 'திருக்கோசில்க்'
P.B.No. : 26

# காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி


**விற்பனைச் சங்கம் லிமிடெட், எண்.ஜி.2054**
**(குளிர்பதனம் செய்யப்பட்டது)**

**207, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.**

## கிளை விற்பனை நிலையம் இயங்குமிடங்கள்

| வ.எண். | | விலாசம் |
|---|---|---|
| 1. | மதுரை | பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடி, 162, கீழவெளி வீதி, மதுரை. |
| 2. | காரைக்குடி | ரங்கூன் ஹால், 45, அம்மன் சன்னதி தெரு, காரைக்குடி. |
| 3. | சேலம் | குமரகிரி சில்க்ஸ், 256, இரண்டாவது அக்ரஹாரம், சேலம் - 1. |
| 4. | ஈரோடு | தேவி சில்க்ஸ், 19, திருவேங்கடசாமி தெரு, ஈரோடு - 1. |
| 5. | கோயம்புத்தூர் | விஜய் சில்க்ஸ், 126, ராஜவீதி, கோயம்புத்தூர். |
| 6. | சென்னை | காஞ்சிபுரம் கோ-ஆப் சில்க்ஸ், உம்மிடியார் ஷாப்பிங் சென்டர், அண்ணா சாலை, சென்னை. |
| 7. | சென்னை | தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கங்களின் விற்பனை வளாகம் நெ. C, 47-2ஆவது அவின்யூ அண்ணாநகர் பிளாசா சென்னை-40. |
| 8. | மேட்டுப் பாளையம் | சக்ரவர்த்தி துகில் மாளிகை, 338டி, மெயின் ரோடு, மேட்டுப்பாளையம். |
| 9. | பொரடட்டுர் | ஜோதி வஸ்திராலயம், 13/401, சிவாலயம் தெரு, பொரடட்டுர். |
| 10. | பொரடட்டுர் | சுசீலா சில்க்ஸ் சாரீஸ், சிவாலயம் தெரு, புரடட்டுர். |
| 11. | இந்துப்பூர் | ஸ்ரீ விநாயகம் சில்க்ஸ், 8-3-327, மெயின் பஜார், இந்துப்பூர். |
| 12. | இந்துப்பூர் | மாருதி சில்க்ஸ், 7-3-314, மெயின்பஜார், இந்துப்பூர். |
| 13. | அனந்தபூர் | சாய்ராம் சில்க்ஸ், 10/332, சுபாஸ் ரோட், அனந்தப்பூர். |
| 14. | சித்தூர் | பாலாஜி சில்க்ஸ், 11/498, சர்ச் தெரு, சித்தூர். |
| 15. | கர்நூல் | வீனஸ் கிளாத் சென்டர், M/66/20 எம்.எச். ரோடு, கர்நூல். |
| 16. | நந்தியால் | ஸ்ரீவிஸ்வதநாதர் கிளாத் சென்டர், மெயின் பஜார், நந்தியால். |
| 17. | தேவாங்கிரி | சாந்தலா சாரீஸ், 323/5, சாம்ராஜ்பெட், தேவாங்கிரி. |
| 18. | பெங்களூர் | ஜெயலட்சுமி ஹால், 717, சிக்பெட் பெங்களூர். |
| 19. | பெங்களூர் | சாந்தலாசிவன் சேரீஸ், ஹனுமன் பில்டிங், தர்மம்பூடி ரோடு, பெங்களூர் - 53. |
| 20. | பெங்களூர் | காமாட்சி சில்க் கேந்திரா, 16-16-25 முதல் மாடி, என் கே.எஸ். பிளாசா, ஏஸ்.எஸ்.சார் தெரு, 20 பெங்களூர். |
| 21. | சிமோகா | ஸ்ரீ பேஷன்ஸ், ஸ்ரீ நிதி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், டி.எஸ்.பி. சர்க்கிள், நேரு ரோட், சிமோகா. |
| 22. | தும்கூர் | வாசவி சில்க்ஸ் & சாரீஸ், மண்டிபெட், தும்கூர். |

பி.ஏ. பழனிசாமி, டி.எச். ட்டி,
துணை இயக்குநர்/தனி அலுவலர்



**வயதானவர்களுக்கு வரும் பார்வைக் குறைபாடுகள் எவ்வாறெல்லாம் ஏற்படும்?**

வயதானவர்களுக்கு எத்தனையோ வகையான கண் உபாதைகள் இருந்தாலும், முக்கியமாக நாம் அறிய வேண்டியது கண்புரை மற்றும் கண் அழுத்த நோயாகும். இதற்குத் தடுப்பு முறை என்று ஏதும் இல்லை. தகுந்த இடைவெளியில் மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றால் ஆரம்பகாலம் மற்றும் முழுவதும் வளர்ந்த நிலையிலும் கண்புரைக்குச் சிகிச்சையளிக்க முடியும். கண் அழுத்த நோய்க்கு ஆரம்ப கால ஆலோசனை மட்டுமே பார்வையைக் காப்பாற்றும். மருந்து மூலமோ, அறுவை சிகிச்சை மூலமோ, ஆரம்ப நிலையில் கவனித்தால்தான் சரிசெய்ய முடியும். இல்லையேல் நிரந்தரமாகப் பார்வைக் கோளாறு ஏற்படும்.

**GLAUCAMA ஆரம்பத்தில் கவனிக்க வேண்டுமானால் அதற்கு என்ன அறிகுறிகள் ஏற்படும்?**

Glaucama-வில் இரு பிரிவுகள் உண்டு. ஒன்று நோயாளிக்குச் சில உபாதைகள் உண்டுபண்ணும் வகை. இது ஒருவிதத்தில் பரவாயில்லையென்று சொல்லலாம். ஏனெனில் இதற்கு நோயாளி ஆரம்பத்திலேயே ஆலோசனைக்கு வர இயலும்; இதில் கண் வலி, பார்வை குறைபடுதல் மற்றும் சிகப்புத்தன்மை ஆகியவை உருவாகும். சில சமயங்களில் விளக்குகளைச் சுற்றி வானவில் போன்ற தோற்றம் காணப்படும் இவையே அறிகுறிகள்.

மற்றொரு பிரிவில் நோயாளிக்கு ஒன்றுமே தெரியாது. சாதாரணமாக இருப்பது போல் உணர்வார். மருத்துவரிடத்தில் வந்தாலும் அங்கு சில பரிசோதனைகள் செய்தாலொழிய இதைக் கண்டுபிடிப்பது அரிது. ஆனால் கண்டுபிடித்தால் மருந்தினாலேயே இக் குறைபாட்டைச் சரிசெய்துவிட முடியும்.

**அப்படியென்றால் இதற்கு நோயாளி என்னதான் செய்வது?**

50 வயதிற்கு மேல் குறைந்தபட்சம் இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது கண் பரிசோதனை செய்துகொண்டால் போதும்: மருத்துவர் எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்.

**LASER வைத்தியம் என்கிறார்களே, அப்படியென்றால் என்ன?**

இப்போது எல்லாவிதமான கண் வியாதிகளுக்கும் Laser சிகிச்சை முறை பயன்படுகிறது.

நீரழுத்த நோய், புரை அறுவை சிகிச்சை செய்தபின் வரும் சில பிரச்சினைகள், சில கட்டிகளை அகற்றுவதால் நீரிழிவு நோயால் விழித்திரை பாதிக்கப்படுவது (Diabetic) மற்றும் Laser மூலம் கண்ணாடி அணிவதை முற்றிலும் தடுக்க இயலும். அடிக்கடி, சுத்தமான தண்ணீரால் முகம் கழுவும் போது, கைபடாமல் கண்களையும் கழுவிக் கொள்ளலாம். ★


படிக்க...பயன்பெற...பாதுகாக்க

**தமிழரசு**

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.72

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம், சென்னை - 600 002



ஆசிரியரும் வெளியிடுபவரும் : ஆர். சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

☎: 22101 தந்தி : 'முருகோசில்க்'

# காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ.ஜி.1653

**79, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.**

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

**தரமான காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பாவடைகள் - நியாயமான விலையில் வாங்க சிறந்த இடம்.**

## விற்பனை நிலையங்கள்

1. காஞ்சி கூட்டுறவு பட்டு,
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
811, அண்ணாசாலை, சென்னை.

2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்
சி-47, இரண்டாவது அவன்யூ,
அண்ணாநகர் பிளாசா,
சென்னை-40.

3. சுவேதா சில்க்ஸ்,
253, இரண்டாவது அஹ்ரஹாரம்,
சேலம்.

4. எஸ். கே. சுந்தரம்,
19, திருவேங்கடசாமி தெரு,
ஈரோடு.

5. ஜெயலக்ஷ்மி சில்க்ஸ்,
71, போலீஸ் வெல்பெயர் காம்ப்ளக்ஸ்,
அனந்தபூர்.

6. கலாமந்தீர் சில்க்ஸ் & சாரீஸ்,
12/120, சிவாலயம் தெரு,
புரதட்டூர்.

7. ஓம் ஸ்ரீ லக்ஷ்மி சில்க்ஸ்,
11/498, சர்ச் தெரு,
ஓ.டி.கே. சாலை, சித்தூர்.

8. மகாலக்ஷ்மி சில்க்ஸ்,
7-3-276, மெயின் பஜார்,
இந்துப்பூர்.

9. ஸ்ரீ வெங்கடேஸ்வரா சில்க் ஹவுஸ்,
206, ருக்மணி பில்டிங்ஸ்,
சிக்பெட், பெங்களூர்.

10. திருவேணி சில்க்ஸ் & சாரீஸ்,
8-9-10, அசோகா ரோடு,
தும்கூர்.

11. ஸ்ரீ சாய்நாத் கிளாத் ஸ்டோர்ஸ்,
1/526, மெயின் பஜார்,
கர்நூல் - 518 001.

12. காமதேனு சில்க்ஸ்,
கே. ஆர். எஸ். காம்ப்ளக்ஸ்,
எம். ஜி. ரோடு, சிந்தாமணி.

13. சாந்தாலா சில்க் ஹவுஸ்,
11, கீழ்தளம், பப்ளிக் யூடிலிட்டி பில்டிங்,
எம். ஜி. ரோடு, பெங்களூர்.

**Dr. பி.கே.பெரியசாமி**
இணை இயக்குநர்/தனி அலுவலர்

# DR. SURENDRAN'S INSTITUTE FOR RESEARCH IN-VITRO FERTILIZATION AND G.I.F.T. PROGRAMME

☆
☆☆
☆☆☆

**Dr. Gopala Pillai's Hospital**
**Nagercoil - 629 001. S. INDIA.**

☆☆☆
☆☆
☆

*Directors :*

**Dr. G. SURENDRAN,** M.B.B.S., F.C.G.P.,
M.W.P.A., A.R.C.PSYCH, (LOND) FIPS
Physician & Psychiatrist, Superintendent

**Dr. INDIRA SURENDRAN,**
M.D., D.G.O., F.I.C.O.G., F.I.C.M.C.H.
Obstetrician & Gynaecologist

# ஆசிரியர் மடல்

“கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதியாவார்; ஆட்சிக்கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்யோசனையுடனும் அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்கட்குப் புதுவாழ்வு தருபவராகிறார்” - என்று புகழ்ந்தார் தந்தை பெரியார்.

“அமைச்சர் பதவி ஏற்றுக்கொள் என்றாலும், தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும் - இரண்டையும் ஒன்றாகக் கருதக்கூடியவர் தம்பி கருணாநிதி...அவர் மூலம் நானும் நாடும் இன்னும் நிரம்ப எதிர்பார்க்கிறோம்” - என்று போற்றிப் பாராட்டினார், அறிஞர் அண்ணா.

இத்தனைப் பெருமைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால், சட்டமன்றப் பவளவிழாவும் சட்டப்பேரவை வைரவிழாவும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. சட்டப்பேரவையின் பொன்விழா கொண்டாடப்பட்டதும் இவர் முதலமைச்சராக இருந்த 1989இல் தான்!

சுதந்திர தினப் பொன்விழாவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால்தான் கொண்டாடப்படவிருக்கிறது.


ஒன்பது முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும், ஒருமுறை மேலவை உறுப்பினராகவும் இருந்த பெருமைக்குரிய ‘விழா நாயகர்’ மாண்புமிகு கலைஞர் அவர்கள், நான்காவது முறையாகத் தமிழக முதலமைச்சராக ஆகி இருக்கிறார்!

எனவே, தமிழ்நாடு-இந்திய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழும்; தமிழ்நாடு சட்டப்பேரவை, மரபு காத்து மங்காப் புகழ்பெறும் என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை!



தூய
பட்டு

தூய
சரிகை




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

